BY


**. VISVANATHA AIYER**

*Sub-Editor "Swadesamitran."*





1- JUL 1922

MADRAS



**P. T. PANI & CO.**

PUBLISHERS AND BOOKSELLERS

Triplicane, Madras


[*Price*


M7

N22

7085

# சர்க்கா

அல்லது

## கைராட்டினத்தின் புனர் உத்தாரணம்

1 - JUL 1922

சுதேசமித்திரன் உதவி ஆசிரியர்

கே. விஸ்வநாத அய்யர்

மொழிபெயர்த்தெழுதியது

பி. டி. பாணி அண்டு கம்பெனி

திருவல்லிக்கேணி, மதராஸ்

1922

காபிரைட்]

MADRAS

P. R. RAMA IYAR AND CO.

PRINTERS

# நூன் முகம்

நமது தேசத்தில் விளையும் பருத்தியைக் கை ராட்டினத்தில் நூற்று, அந்த நூலைக் கைத் தறியில் நெய்து நமக்குத தேவையான வஸ்திரங்களை நாம் உற்பத்தி செய்துகொண்டு விடின், நம்மை வாட்டும் பலவகைக் கஷ்டங்களுக்கும் நிவர்த்தியுண்டாகி விடுமென்று மகாத்மா காந்தி முதலிய பெரியோர்கள் உபதேசம் செய்து வருகிறார்கள். நமக்குத் தேவையான வஸ்திரங்களை நாம் உற்பத்தி செய்துகொள்வதால் தாங்கள் அடைந்து வரும் லாபம் போய் விடுமென்று பயப்படுகிறவர்களும் அவர்களிடத்தில் நற் பெயர் வாங்கத் தாளம் போடுகிறவர்களும் "இது பைத்தியக்கார யோசனை, இயந்திரங்களுடன் கையினால் போட்டி போடக் கூடுமா?" என்று ஏளனம் செய்கிறார்கள். அவர்கள் சொல்வது தான் பைத்தியக்காரத்தனமென்றும், இயந்திரங்களுக்கும் நமக்கும் போட்டி கிடையாதென்றும், கையினால் நூற்று, கையினால் நெய்து, அன்னிய வஸ்திரங்களைவிட மலிவான வஸ்திரங்களை நாம் உற்பத்தி செய்துகொள்ளக் கூடுமென்றும் ருஜுச்செய்ய இச்சிறு நூல் ரெய்பகதூர் இந்து பூஷண பகதூரி என்பவரால் இயற்றப்பட்டதாகும். "ஈஸ்டு இந்தியா கம்பெனி" நமது தேசத்தை ஆரம்பித்த காலத்தில் ஓய்வு நேரத்தில் ஸ்திரீக நூற்றுக் கொடுத்ததைக் கொண்டு நெசவு தேச ஜனங்களின் தேவைக்குப் போது

கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்ததுடன், இங்கிலாந்து முதலிய அன்னிய தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதை அக்காலத்திய தஸ்தாவேஜிகளைக் கொண்டு ஸ்ரீமான் இந்து பூஷண பகதூரி மெய்ப்பித்திருக்கிறார். இயந்திரங்களுடன் போட்டிபோட்டு இந்தியாவின் கைத்தொழில் நசிக்கவில்லையென்பதும், அது நசித்துப் போகும்படி ராஜாங்கத்தார் தங்களுடைய அதிகாரங்களை உபயோகித்தார்கள் என்பதும் இந்நூலினால் விளங்கும். அக்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்ட முறையைப் பின்பற்றி நமது பெண்மணிகள் பிற்பகலில் ஓய்வு நேரத்தில் நூல் நூற்க முன் வருவார்களாயின், நமக்குத் தேவையான கதர் வஸ்திரங்களை நாம் உற்பத்தி செய்துகொண்டு விடலாம். இதற்கான யோசனைகளை ஸ்ரீமான் பகதூரி சொல்லியிருக்கிறார். ஸர். பிரபல்ல சந்திர ரே இந்நூலைப் போற்றி ஆங்கிலத்தில் ஒரு முகவுரை எழுதியிருப்பதிலிருந்தே இதனுடைய அருமை பெருமையை அறிந்து கொள்ளலாம். இதனைப்படித்து இதில் சொல்லியிருக்கிறபடி செய்து, இந்த தேசம் நற்கதி அடையும்படி ஸகல இந்தியர்களும் செய்யுமாறு கடவுள் அவர்களுக்கு நல்லபுத்தி கொடுப்பாராக.

1- JUL 1922

# சர்க்கா

அல்லது

## கை ராட்டினத்தின் புனர் உத்தாரணம்.

---

பெருமகன் காந்தி, பேரறிவாளன்
தருமநெறி நின்மின் தாய்மாரே நீர்
தருமநெறி நின்று தாய்மாரே நீர்
ராட்டினஞ் சுற்றுமின்
நாட்டினைக் காமின்.

## அத்தியாயம் I.

### பூர்வ பீடிகை.

சர்க்கா அல்லது கை ராட்டினத்தைப் பற்றி இக் காலத்தில் ஜனங்கள் பேசின வண்ணமாக இருக்கிறார்கள். ராஜீயத்துறையிலும் செல்வத்துறையிலும் நாம் நற்கதியடைய சர்க்கா ஒன்று தான் உபாயமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அது பைத்தியக் காரத்தனமான எண்ணமென்றும், புத்திமான்கள் அதைப்பற்றி ஒரு விநாடிப்பொழுதுகூட ஸ்மரிக்கக் கூடாதென்றும் வேறு சிலர் சொல்லுகிறார்கள். இக் காலத்தில் நாம் விருத்தியடைந்து வருகிறோமாம், அப்படியிருக்கையில் "பழைய காலத்து ராட்டினத்தை ஒரு கையிலும், வேதத்தை மற்றக்கையிலும்

எடுத்துக் கொள்ளவேண்டும்" என்ற நினைப்பையே உண்டுபண்ணக் கூடாதென்பது அவர்களுடைய அபிப்பிராயம். சர்க்காவின் சீட்டை வெகு காலத்துக்கு முன்னமேயே கிழித்தாகிவிட்ட தென்றும், இயந்திரத்துடன் அது போட்டிபோடக் கூடுமென்று நினைப்பது வீண்பிரமை யென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்திய மிதவாத சங்கத்தார் சமீபத்தில் கூடியபோது, பார்டோலி என்ற இடத்தில் ஒத்துழையாமைக்காரர்கள் செய்த தீர்மானத்தைப்பற்றி யோசனை செய்து தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். வீட்டை விட்டு வெளியே போகாமல் ஏதேனும் தொழில் செய்ய விரும்புகிறவர்கள் பொழுதை வீணுக்காமல் சர்க்காவைக் கொண்டு நூல் நூற்பது சரிதானென்றும், ஆனால் செல்வத் துறையில் ஜனங்கள் முன்னுக்குப் போகவேண்டுமானால் அது உபயோகப்பட மாட்டாதென்றும், தேச உத்தாரணத்தின் பொருட்டு வேலைசெய்ய இயந்திரங்கள் முதலியவைகளையே உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் அபிப்பிராயப் பட்டனர்.

தற்காலத்தில் நம்மைச் சூழ்ந்துள்ள விஷயங்களில் நாம் மூழ்கிப் போயிருக்கிறோமாகையால், சிறிது யோசனை செய்யவேண்டிய விஷயங்களைப்பற்றி விசாரணைசெய்யவே நமக்கு மனமிருக்கிறதில்லை. எந்த விஷயத்தைப்பற்றியும் முடிவான அபிப்பிராயம் சொல்லத் தக்கவர்கள் என்று சிலரை மதிக்கிறோம்; அவர்கள் சொல்வதே சரியென்று ஒப்புக்கொண்டு விடுகிறோம். இந்த புத்திப்போக்கிருக்கக் கூடாதாயினும், அது இருப்பதானது ஆச்சரியமல்ல. உலகில் உண்

டாகி வரும் அபிவிருத்தியைக் கண்டு திருப்தி யடையும்படி சிறு பிராயத்திலிருந்து நாம் பழக்கப்பட்டிருக்கிறோம்; உயிர் போய்விடாமல் காத்துக்கொள்வதற்கு வேண்டிய வரையில் சம்பாதித்து விட்டால் நமது கடமையைச் செய்தாகி விட்டதென்ற நினைப்புள்ளவர்களாக விருக்கிறோம்; அன்னியரின் ஆதிக்கத்தில் நூற்றாண்டுக் கணக்காக இருந்து வந்திருப்பதன் பலனாக, சுயமாக சிந்தனை செய்யும் வழக்கமே நம்மிடத்திலிராமற் போய்விட்டது. நமது தேசத்தை ஆளுகிறவர்கள் நமக்குப் பதிலாகச் சிந்தனை செய்து விடுகிறார்கள். நாம் செய்யவேண்டிய காரியங்களை அவர்கள் செய்து வருகிறார்கள். பசியை நிவிர்த்தி செய்து கொள்வதும், சந்ததியைப் பெருக்குவதும் தவிர வேறு வேலைகள் நமக்கில்லை. நம்மை ஆளுவோர் செய்வன வெல்லாம் வேதத்தைப்போல் ஸத்தியமென்று ஆராய்ச்சி செய்யாமலே நாம் ஒப்புக்கொண்டு விடுகிறோம், மேலும் ஆராய்ச்சி செய்ய நமக்கு இஷ்டமாவது சக்தியாவது இருக்கவுமில்லை.

வெகு காலத்திற்கு முன்னமேயே கீர்த்தி அடைந்த ஜாதியினர் நாம் என்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம். பண்டைக் காலத்திலேயே நாம் நாகரீக மடைந்த ஜனங்களாக விருந்ததாகவும், அப்பொழுது ஐரோப்பியர்கள் "விறகு வெட்டிகளாகவும் தண்ணீர் தூக்கிகளாகவு மிருந்ததாகவும் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறோம். ஆனால் அந்த நிலைமை ஏன் மாறிப் போய்விட்டதென்று நாம் யோசனை செய்கிறதில்லை. நாம் அரை குறையான நாகரீகமடைந்தவர்கள் என்று மற்ற ஜாதியினர் நம்மை ஏன் சொல்லுகிறார்கள்? உன்னத ஸ்திதியி

லிருந்து நாம் கீழே விழுந்துவிட்டதைப்பற்றி அன்னியர் எழுதியிருப்பது தவிர நம்மிடம் ஒரு சரித்திரமுமில்லை. அவர்கள் எழுதியிருப்பதையாவது படித்து, நூறு வருஷங்களுக்குமுன் என்ன ஸ்திதியிலிருந்தோம், இப்போது என்ன ஸ்திதியிலிருக்கிறோமென்று நாம் அறிந்து கொள்ளுகிறதில்லை.

1916-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட இந்தியத் தொழில் அபிவிருத்திக் கமிட்டியினுடைய யாதாஸ்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டும்.

"தற்காலத் தொழில் முறைக்குப் பிறப்பிடமும் ஐரோப்பாவின் மேற்குப் பாகமுமாகிய தேசங்களில் வாழ்ந்துவந்த ஜனங்கள் அநாகரீகர்களாகவிருந்த காலத்தில், இந்தியா பெருங்கீர்த்தி அடைந்திருந்தது. அதிலிருந்த அரசர்கள் பெரிய செல்வம் படைத்தவர்கள் என்றும், அதிலிருந்த கருமான்கள் வெகு திறமை வாய்ந்தவர்கள் என்றும், இந்தியாவின் புகழ் பரவியிருந்தது. வெகுகாலமான பிறகும், ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவில் தோன்றினபொழுது, தொழில் செய்வதில் இத்தேசமடைந்திருந்த நிலைமையானது ஐரோப்பிய தேசங்களில் எதுவும் அடைந்திருந்த நிலைமைக்குத் தாழ்வானதல்ல."

கிரீஸ் தேசத்து அரசனாகிய அலெக்ஸாண்டர் என்பவன் பண்டைக்காலத்தில் இந்தியாவின் மேல் படை யெடுத்த பொழுது, இந்தியாவின் நாகரீகம் மகோந்நத ஸ்திதியிலிருந்தது; ஜனங்கள் வெகு சுபிட்சமாக விருந்தார்கள். இவ்விஷயமாக மௌண்டு ஸ்டூவேர்ட் எல்பின்ஸ்டன் என்ற சரித்திரக்காரர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"ஒரு ஜாதி நாகரீகத்தில் முதிர்ந்ததென்பதை சில துறைகளில் அது அடைந்திருக்கிற அபிவிருத்தி காட்டும். அம்மாதிரித் துறைகளிலெல்லாம் இந்தியர் விசேஷ அபிவிருத்தி அடைந்திருந்தனர் என்பது அன்னிய தேச வியாபாரத்தின் பொருட்டு பல வியாபார ஸ்தலங்களும் துறைமுகங்களும் இந்தியாவில் அக்காலத்தில் இருந்ததிலிருந்தே விளங்குகிறது. வயல்கள் எல்லாம் அளக்கப்பட்டு, சாகுபடிக்குத் தேவையான ஜலம் வெகு ஜாக்கிரதையுடன் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. வியாபாரத்தின் மீது வரிகள் விதிக்கப்பட்டு, வியாபாரிகளிடமிருந்து வருமான வரி வசூல் செய்யப்பட்டு வந்தது. பொன்னும் ரத்தினங்களும், பட்டாடைகளும் நகை நாணயங்களும் எல்லாக் குடும்பங்களிலு மிருந்தன. கிரேக்கர்களின் ஸ்தாபனங்களைவிட அவர்களுடைய ஸ்தாபனங்கள் முரட்டுத்தனத்தில் குறைந்தவைகளா யிருந்தன; சத்துருக்களிடத்தில் கிரேக்கர்களைவிட அதிகக் கிருபையுடன் அவர்கள் நடந்து கொள்ளுகிறவர்களாக விருந்தனர். கிரேக்கர்களைக் காட்டிலும் அதிகமான கல்வியறிவுள்ளவர்களாகவிருந்தனர். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற விஷயமாகவும் அவருடைய குணங்களைப் பற்றியும் இந்தியர்கள் படைத்திருந்த அறிவு பெரிதாகவும், அதே விஷயங்களைப்பற்றிக் கிரேக்கர்களில் மகா மேதாவிகள் படைத்திருந்த அறிவு சொற்பமாகவுமே இருந்தன.

"அசோகன், பிம்பிஸாரா ஆகிய அரசர்களுடைய காலமுடிய இந்த ஸ்திதியிலேயே நமது தேச மிருந்தது; மகத ராஜ்யம் சிதறுண்டுபோனதும், தேசம் பல சிற்றரசுகளுக்குட் பட்டதாகிவிட்டது; அதற்குப்

பிறகு முகம்மதியர்கள் படையெடுத்துத் தேசத்தைப் பிடித்துக் கொண்டனர். அதன் பலனாக, அபிவிருத்தி சிறிது காலம் தடை பட்டுப் போய்விட்டது; இந்தியத் தொழில்களும் தொழிலாளிகளும் சில நூற்றுண்டுகள் சங்கடப் பட்டனர். ஆனால் முகலாய ராஜ்யம் உறுதிப் பட்டதும் மறுபடியும் இந்தியாவானது முதல் தர தேசங்களிலொன்றாகி விட்டது. பெர்னியர், டிராவர்னியர் என்ற சரித்திரக்காரர்கள் எழுதியுள்ள நூல்களைப் படித்திருக்கிறவர்கள் நான் சொல்வது சரியென்று ஒப்புக் கொள்ளுவார்கள்.

முகலாய ராஜ்ய காலத்தில் தான், ஐரோப்பா கண்டத்து வியாபாரிகள் இந்தியாவிற்கு வர ஆவல் கொண்டார்கள் என்பது சரித்திரம் படித்தவர்களுக்குத் தெரியும். "அதனுடைய பண்டங்களைப்போல் மனுஷ்யனுடைய சாமர்த்தியத்தினால் எக்காலத்திலும் எத் தேசத்திலும் செய்யப்பட்டதில்லை; ஆகையால் அன்னிய தேச வியாபாரிகள் பெரிய அபாயங்களை லட்சியம் செய்யாமலும் அவைகளை அடைய முயன்றனர்" என்று மர்ரே என்பவர் எழுதியுள்ள சரித்திரத்தில் சொல்லப்பட் டிருக்கிறது.

"ஈஸ்டு இந்தியா கம்பெனி" இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்த காலத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட பண்டங்களால் இங்கிலாந்திலுள்ள கடைத்தெருக்கள் எல்லாம் நிறைந்திருந்தன. ஆகையால் இங்கிலாந்தில் பெரிய திகில் உண்டாகிவிட்டது. அக்காலத்தில் இந்தியாவைக் கட்டுப்படுத்தி சட்டம் செய்யக் கூடிய ஸ்திதியில் இங்கிலாந்திருக்கவில்லையாகையால், சட்டமியற்றித் தன்னுடைய தொழில்களைப்

பாதுகாத்துக்கொண்டது. லெக்கி என்ற சரித்திரக்காரர் பின்வருமாறு சொல்லுகிறார்:

"பதினேழாவது நூற்றாண்டில் ஔரங்கஸீப் என்ற முகலாய அரசன் ஆண்டுவந்த காலத்தில், விலையில் மலிவானவைகளும் அழகு நிறைந்தவைகளுமாகிய இந்திய ஸல்லாக்களும் மஸ்லின்களும் சீட்டிகளும் இங்கிலாந்தில் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டன. ஜனங்கள் வெகு பிரியத்துடன் அவைகளை வாங்கினதால், இங்கிலாந்தின் பருத்தி நெசவுக்காரர்களும் பட்டு நெசவுக்காரர்களும் பயந்து போய் விட்டார்கள். ஆகையால் 1700-ம் வருஷத்திலும் 1721-ம் வருஷத்திலும் இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. சில தினுஸுகள் தவிர மற்ற ஸல்லா தினுஸுகள் உடுப்பாகவோ வேறு விதத்திலோ இங்கிலாந்தில் உபயோகிக்கப்படக் கூடாதென்று அந்தச் சட்டங்கள் தடுத்துவிட்டதுடன், பருத்தி சம்பந்தப்பட்ட எந்த வஸ்திரமும் உபயோகிக்கப்படக் கூடாதென்றும் தடுத்து விட்டன."

மேலே குறிப்பிட்டுள்ள விஷயங்களைப்பற்றி நான் ஒரு வியாக்கியானமும் செய்யவில்லை; படிக்கிறவர்கள் தங்களுடைய புத்தியில் படுகிறபடி ஊகித்துக்கொள்வார்களாக. ப்ரிட்டிஷார் இந்தியாவைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு என்ன நடந்ததென்பதை இனிக் கவனிப்போம்.

## அத்தியாயம் II.

### நூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவின் தொழில்கள்.

பிளாஸி என்ற இடத்தில் நடந்த சண்டைக்குப் பிறகு, வங்காளம் அநேகமாக ப்ரிட்டிஷ் ஆட்சிக்குட் பட்டு விட்டது. "ஈஸ்டு இந்தியா கம்பெனி" என்ற ஒரு கோஷ்டி வியாபாரிகள் தேசத்தில் ஸர்வாதிக்கம் அடைந்து விட்டதால், தங்களுடைய வியாபாரத் தையே பெரிதாகப் பாவித்து மற்ற விஷயங்களை அதற் குட்படுத்தி விட்டனர். இந்தியரின் நன்மையை உத் தேசித்துத் தாங்கள் இந்தியாவை ஆளுகிறதாக ப்ரிட் டிஷ் ராஜதந்திரிகளும் நிர்வாகிகளும் அக்காலத்தில் சொல்லவில்லை. ராஜாங்கமென்பதே இல்லை, இங்கி லாந்தும் "ஈஸ்டு இந்தியா கம்பெனி" யின் சிப்பந்தி களும் பணக்காரர்களாகும்படி செய்யத்தக்க வரிகள் போடச் சட்டங்கள் இயற்றப்பட்டன. கம்பெனி யாரின் காலத்தில் தேசத்தின் நிலைமை எப்படி இருந் ததென்று தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் காலஞ் சென்ற ரோமச்சந்திர தத்தர் "ப்ரிட்டிஷ் இந்தி யாவின் பொருளாதாரச் சரித்திரம்" என்ற பெயரு டன் எழுதியிருக்கிற நூலைப்படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பல தலைமுறைகளுக்கு முன் நடந்துபோன விஷயங்களை இப்பொழுது கண்டிப்பது எனது உத் தேசமல்ல. நான் தெரிந்துகொண்டிருக்கிற சில விஷ யங்களை உங்களுக்கு அறிவிப்பதே எனது எண்ணம்; அவ்விஷயங்களைப் படித்துவிட்டு, கை ராட்டினத்தை யும் கைத் தறியையும் புனர் உத்தாரணம் செய்ய வேண்டு மென்பது சரியான யோசனையா அல்லது

பிரமையா, கைராட்டினத்தைக் கொண்டு நூல் நூற்பதை ஒரு தொழிலாக அநுஷ்டானத்தில்கொண்டு வரக் கூடுமா, நமக்குத் தேவையான வஸ்திரங்களை நாம் அந்த நூலைக்கொண்டு செய்துகொள்ளக் கூடுமா, அதன் பலனாக நமது தரித்திர நிலைமை சிறிது தீருமா என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். இக்காலத்தில் இயந்திரங்களைக் கொண்டு நூல் நூற்று நெசவு செய்கையில் கை ராட்டினத்தைக் கொண்டே நமது காரியங்கள் முடிந்துவிடுமா என்பதையும் நீங்களே முடிவுசெய்து கொள்ளலாம். நான் சேகரம் செய்துள்ள விஷயங்களை முதலில் சொல்லிவிட்டு, அவைகளை ஆதாரமாகக் கொண்டு எனக்குத் தோற்றுகிற யோசனைகளைச் சொல்லுவேன். அந்த யோசனைகளை நிறைவேற்றும் பொருட்டு நாம் என்ன வேலை செய்யவேண்டுமென்பதையும் குறிப்பிட்டு விடுகிறேன். அப்படிச் செய்யலாமா கூடாதா என்று தீர்மானிப்பது உங்களுடைய பாத்தியமாகும்.

இயந்திரங்களும் நீராவியின் சக்தியும் கண்டுபிடிக்கப்பட்டதற்குமுன், ஒவ்வொரு தேசத்திலும் கையால் நூல் நூற்றுக் கையால் நெசவு செய்தே வஸ்திரங்களை உற்பத்தி செய்தார்கள். இப்படி இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட வஸ்திரத்தில் இந்தியாவின் தேவைக்குக் கண்டு மிஞ்சியது அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது; அன்னிய தேசங்களுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்ட வஸ்திரமானது அன்னிய தேசக் கப்பல்களில் அனுப்பப்படவில்லை; இந்தியாவில் கட்டப்பட்டு இந்தியரால் ஓட்டப்பட்ட கப்பல்களிலேயே அனுப்பப்பட்டது. கீழ்த்திசையிலும் மேற்றிசையிலும் வெகு தூரத்திலுள்ள பிர

தேசங்களுக்கு இந்தியக் கப்பல்கள் போய் வந்தன. பண்டைக்காலத்தில் இந்தியாவில் கப்பல் கட்டப்பட்டு வந்த விஷயமாக ராதா குமுத முக்கர்ஜி எழுதியுள்ள நூலைப் படிக்கவும். "நூறு வருஷங்களுக்குமுன் மிகவும் நேர்த்தியான கப்பல்கள் இந்தியாவில் கட்டப்பட்டு வந்ததால், இங்கிலாந்தில் கட்டப்பட்ட கப்பல்களுடன் அவை லண்டன் துறைமுகத்துக்குப் பிரயாணம் செய்யக்கூடியவைகளா யிருந்தன" என்று மிஸ்டர். வில்லியம் டிக்பி சொல்லி யிருக்கிறார். ஆனால் இந்தியக் கப்பல்கள் லண்டன் துறைமுகத்துக்குப் பிரயாணம் செய்வதானது திமிர்பிடித்த காரியமென்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் வியாபாரிகளும் நினைத்ததால், உடனே அதைத் தடுத்து விட்டார்கள். டெய்லர் எழுதியுள்ள சரித்திரம் 216-வது பக்கத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"இந்திய சாமான்கள் இந்தியக் கப்பல்களில் லண்டன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்ததும், ஏக தேச பாத்தியம் படைத்தவர்கள் பதறிப் போய் விட்டார்கள். லண்டனுக்கு எதிரில் சத்துருவின் கப்பற் படை தோன்றி யிருந்தால்கூட அவ்வளவு பதறுதல் ஏற்பட்டிராது. லண்டன் துறைமுகத்தில் கப்பற் கட்டும் தொழிற்காரர்கள் முதலில் கூச்சல் போட்டனர்; தங்களுடைய தொழில் நாசமாகிவிடக் கூடிய காலம் வந்து விட்டதென்றும், இங்கிலாந்தில் இந்தத் தொழிலைச் செய்கிற எல்லோருடைய குடும்பங்களும் பட்டினி கிடக்கவேண்டியதுதா னென்றும் அவர்கள் ஓலமிட்டனர்."

1800-ம் வருஷத்தில், கவர்னர் ஜெனரலாக விருந்த லார்டு வெல்லஸ்லி என்பவர் இந்தியக் கப்பல்களும் இங்

திய சாமான்களும் இங்கிலாந்திலுள்ள துறைமுகங்களுக்குப் போகத் தடையிராமற் செய்ய முயன்றார். ஆனால் "ஈஸ்ட் இந்தியா கம்பெனி" யின் மேலதிகார சபையார் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த வியாபாரத்தில் இந்தியக் கப்பல்களை உபயோகப்படுத்தக்கூடாதென்று எதிர்த்தார்கள். அவர்களுடைய அர்ஜியிற் பின்வருமாறு காணப்படுகிறது :—

"பிரஸ்தாப விஷயமாக மேற்சொல்லப்பட்ட ஆட்சேபங்கள் பொதுவானவை. அவை தவிர விசேஷ ஆட்சேபம் ஒன்றுளது. இந்தியாவிலிருந்து புறப்படும் கப்பல்கள் இந்திய லஸ்கர்களையே மிகுதியும் கொண்டனவாக விருக்குமாகையால், அந்த ஆட்சேபம் அக்கப்பல்களுக்குப் பொருத்தமாக விருக்கிறது. அந்த ஜாதி ஜனங்கள் குளிர் மிகுந்த கடல்களிலும் கொந்தளிப்பு மிகுதியாக விருக்கும் பிரதேசங்களிலும் கப்பலைச் செலுத்த அவர்களுடைய சரீர அமைப்பு இடங் கொடுக்காது. உஷ்ணமான பிரதேசங்களில் பருவக் காற்றுகள் வீசுங்காலங்களில் சிறிது தூரம் போய் வரவே அவர்களுடைய சுபாவமும் பழக்க வழக்கங்களும் இடங் கொடுக்கும். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கு மிடையில் வெகு தூரமிருப்பதால், பல வகைப்பட்ட கடல்களிற் பிரயாணம் செய்ய வேண்டி யிருக்கிறது. அப்படிப்பட்ட பிரயாணத்திற்கு இயல்பாகவுள்ள கஷ்டங்களையும் அபாயங்களையும் சமாளித்துக்கொள்ள அவர்களுக்கு மன வலிமையாவது சரீர வலிமையாவது இல்லை. வழியில் சத்துரு தாக்கினால் கப்பலைக் காப்பதற்கு வேண்டிய தைரியமும் அவர்களிடமில்லை. இவை மாத்திரமல்ல. இந்திய மாலுமிகள் இங்கு வந்து சேர்ந்ததும், சில ஸ்தலங்

களுக்கு அழைத்துக் கொண்டு போகப்படுகிறார்கள், ஐரோப்பியரின் குணத்தைப்பற்றி இந்தியாவில் அவர்களுக்குண்டாயிருந்த பயம் மேற்சொன்ன ஸ்தலங்களை அவர்கள் பார்த்ததும் போய் விடுகிறது. தங்களுடைய தேசத்திற்கு அவர்கள் திரும்பிப் போனதும் அலட்சிய புத்தியுடன் அவர்கள் வெளியிடும் சமாசாரங்கள் நம்முடைய பிரஜைகளின் மனதைக் கலக்காமலிருக்க முடியாது. நம்முடைய ஆதிக்கத்தை இது வரையில் காத்து வந்திருப்பது நம்முடைய நடத்தையில் அவர்களுக்குள்ள மதிப்பே; அது போய்விடுவதன் பலனாகப் பெரிய விபரீதம் விளையலாம். ஆகையால் சரீர அமைப்பை உத்தேசிக்கையிலும், மனவலிமையை உத்தேசிக்கையிலும், வியாபாரத்தை உத்தேசிக்கையிலும், ராஜீய பலன்களை உத்தேசிக்கையிலும், இந்திய மாலுமிகளை மிகுதியாகவுடைய கப்பல்களைத் தாங்கள் விரும்புவது போல் உபயோகப் படுத்துவது கூடாதென்று ஏற்படுகிறது.''

இதன் பலனாகக் கப்பற் கட்டும் தொழில் நின்று போய், கப்பற் செலுத்தும் தொழிலும் நசுக்கப்பட்டு விட்டது. நாகரீக உலகத்தார் செய்யும் தொழில்களில், அன்னிய அரசாங்கத்திற் குட்பட்டிருந்த காலத்திலும் நமது தேசத்தார் மேன்மை யுற்றிருந்தனர் என்பது இதனால் விளங்குகிறது.

சென்ற நூற்றாண்டின் முற்பாகத்தில் பருத்தி வஸ்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்ததை இனிக் கவனிப்போம். "இந்தியாவின் பொருளாதார சரித்திரம்'' 296-வது பக்கத்தில் ரோமச் சந்திர தத்தர் பின் வருமாறு சொல்லி யிருக்கிறார் :—

"பல தடைகளும் தடை வரிகளும் ஏற்பட்

டிருந்தும் சென்ற 19-வது நூற்றாண்டின் முதல் நான்கு வருஷங்களில், ஆறாயிர மூட்டைகள் முதல் பதினையாயிரம் மூட்டைகள் வரையில் கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டன. 1813-ம்வருஷத்தில் ஏற்றுமதி குறைந்துபோய்விட்டது. (ஈஸ்டுஇந்தியா கம்பெனிபோல்) மற்ற வியாபாரகளும் வியாபாரம் செய்யலாமென்று அனுமதி கொடுக்கப்பட்ட தன் பலனாக 1815-ம் வருஷத்தில் ஏற்றுமதி பெருகிற்று. ஆனால் அது நீடித்திருக்கவில்லை. 1820-ம் வருஷத்திற்குப் பிறகு பருத்தி வஸ்திர உற்பத்தியும் ஏற்றுமதியும் வரவரக் குறைந்து போய்விட்டன; அதற்கப்புறம் பெருகவேயில்லை" இந்தியாவில் தொழில் செய்வோரின் தொகை அதிகமாயிருந்ததாலும், பருத்தி வஸ்திரம் நெய்யும் தொழில் நல்ல ஏற்பாட்டின்மேல் நடந்து வந்ததாலும், நம்மை ஆள்வோர் சமமான நிலைமையில் நம்முடன் போட்டி போட முடியாதென்று கண்டுகொண்டதும், சட்டமியற்றித் தங்களுக்கு அனுகூல மேற்படுத்திக் கொண்டார்கள்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போன சாமான்களுக்குமேல் 1873-ம் வருஷத்தில் பின்வருமாறு வரி செலுத்தவேண்டி யிருந்தது :—

| | ப. | ஷி. | பெ. |
|---|---|---|---|
| 100-பவுன் விலையுள்ள ஸல்லாக்களுக்கு | 81 | 2 | 11 |
| 100-ராத்தல் நிறையுள்ள பருத்திக்கு | 0 | 16 | 11 |
| 100-பவுன் விலையுள்ள பருத்தி வஸ்திரங்களுக்கு | 81 | 2 | 11 |

ஆனால் இங்கிலாந்தில் நெய்யப்பட்டு இந்தியாவில்

இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி வஸ்திரங்களுக்கு நூற்றிற்கு 2½ வீதமே வரி யேற்பட்டிருந்தது. H. H. வில்ஸன் என்ற ஆசிரியர் எழுதியுள்ளதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்தெழுத வேண்டியது அவசியமாக இருக்கிறது:—

" இங்கிலாந்தில் உற்பத்திசெய்யப்பட்ட வஸ்திரங்களின் விலையைக் காட்டிலும் நூற்றுக்கு 50 அல்லது 60 குறைவாக இந்திய வஸ்திரங்களை இங்கிலாந்தில் விற்று லாபமடையக்கூடுமென்று 1813-ம் வருஷத்தில் நடந்த விசாரணையில் சாட்சிகள் சொன்னார்கள். ஆகையால் இங்கிலாந்தில் செய்யப்பட்ட வஸ்திரங்களின் விலையில் நூற்றுக்கு 70-அல்லது 80 வீதம் இந்திய வஸ்திரங்களுக்கு வரி விதித்தோ அல்லது இந்திய வஸ்திரங்களின் இறக்குமதியை அடியுடன் தடுத்தோ இங்கிலாந்தின் நெசவுத் தொழிலைக் காக்க வேண்டியது அவசியமாகிவிட்டது. இப்படிச் செய்திராவிடில்—தடைவரிகளும் சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிராவிடில்—இங்கிலாந்திலுள்ள பெய்ஸ்லி, மாஞ்செஸ்டர் என்ற ஸ்தலங்களிலிருக்கும் நெசவுச் சாலைகளின் வேலை நின்றேபோயிருக்கும். நீராவின் சக்தியைக்கொண்டும் அவைகளை மறுபடியும் உத்தாரணம் செய்வது அசாத்தியமாக விருந்திருக்கும். இந்தியாவுக்குச் சுவாதீன மிருந்தால், பதிலுக்கான காரியங்களை அது செய்திருக்கும். ப்ரிட்டிஷ் சாமான்களின்மீது அது தடை வரிகளை விதித்து, தன்னுடைய தொழில் நாசமுறாமல் காத்துக்கொண் டிருக்கும். ஆனால், இவ்வாறு தன்னைக் காத்துக்கொள்ள அதற்குச் சுவாதீன மேற்படாமற் போய் விட்டது. அன்னியருடைய கையில் அது அகப்பட்டுக்கொண்டதா

யிருந்தது. ஒரு வரியுமின்றி ப்ரிட்டிஷ் சாமான்களை நிர்ப்பந்தமாக இந்தியாவில் உபயோகித்துக்கொண்டு வந்தனர். யாருடன் சமானமான நிலைமையில் தங்கள் போட்டி போட்டிருக்கமுடியாதோ அவர்களை நசுக்கிப் போட அன்னிய தேசத்தொழிலாளர் ராஜியத்துறையில் அக்கிரமம் செய்தனர்."

ஸர் ஹென்ரி காட்டன் என்பவர் எழுதியுள்ள 'நியூ இந்தியா' என்ற புஸ்தகத்தில் மேற்சொன்ன ராஜிய அக்கிரமத்திற்கு ஒரு உதாரணம் கொடுத்திருக்கிறார் :—

"சுமார் நூறு வருஷங்களுக்குப் பிந்தின காலத்தில் டாக்கா நகரில் ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் வருஷந்தோறும் விற்பனையாகி வந்தன, 2-லட்சம் ஜனங்கள் அதில் இருந்தனர். 1787-ம் வருஷத்தில் டாக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 30-லட்சம் ரூபாய் கிரயமுள்ள மஸ்லின்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1817-ம் வருஷத்தில் அந்த ஏற்றுமதி முற்றிலும் நின்று போய் விட்டது. வெகு ஜனங்கள் பிழைப்பதற்குக் காரணமாக விருந்த நூற்கும் தொழிலும் நெசவுத் தொழிலும் இப்பொழுது மறைந்து போய் விட்டன. ஒரு காலத்தில் ஸ்ரீமான்களாக இருந்தவர்கள் நாட்டுப்புறங்களுக்கு வயிற்றுப் பிழைப்புக்காகப் போய் விட்டனர். இப்பொழுது (1890-ம் வருஷத்தில்) 79-ஆயிரம் ஜனங்களே டாக்காவில் இருக்கிறார்கள். இப்படி க்ஷீணதசை ஏற்பட்டிருப்பது டாக்காவில் மாத்திரமன்று, எல்லாஜில்லாக்களிலும் இப்படியே இருக்கிறது. தேசத்தில் எந்த ஸ்தலத்திலும் தொழில் செய்யும் ஜனங்கள் தரித்திர

ஸ்திதியை அடைந்து வருகிறதாக ஜில்லா அதிகாரிகள் கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்தாத வருஷமில்லை."

இதன்மேல் வியாக்கியானம் செய்யத் தேவையில்லை. இப்படி யிருக்கையில் இந்திய மாணவர்களுக்குப் பொருளாதார சாஸ்திரத்தை எதற்காகக் கற்பிக்கிறார்கள்?

தடை வரிகள் பிறகு எடுபட்டுவிட்டனவாயினும், அதற்குள் இந்தியத் தொழில்கள் நாசமடைந்து விட்டன. ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிரஜைகள் என்று சிறப்பாகச் சொல்லிக்கொள்ளும் கோடாநு கோடி ஜனங்கள் ப்ரிட்டிஷ் முதலாளிகளின் நெசவுசாலைகளுக்குத் தேவையான பருத்தி முதலிய மூலப்பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களாகி விட்டனர்.

---

## அத்தியாயம் III.

### 19-வது நூற்றாண்டின் முன் பாகத்தில் நூல் நூற்கப்பட்டதையும் நெசவையும் பற்றி.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் நூல் நூற்கவும் நெசவு செய்யவும் என்ன ஏற்பாடுகள் இருந்தன என்பதைக் கூடுமான வரையில் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அக்காலத்தில் (அதாவது 1807-ம் வருஷத்தில் தேசமானது மிகுந்த தரித்திர ஸ்திதியிலிருந்தது; யாதொரு பிரதிப் பிரயோஜனமுமின்றி ப்ரிட்டிஷ் ஆட்சியின் பலனாக 840-கோடி பவுன் சில வருஷங்களில் வடிக்கட்டப் பட்டுபோன தன் பலனாகவே மேற்சொன்ன தரித்திர நிலைமை ஏற்பட்டது. (மார்டின் எழுதிய "கிழக்கிந்தியா" என்ற நூலின் முகவுரையைப் பார்க்க) "வருஷா வருஷம்

இந்தியாவின் செல்வம் ஓய்வின்றி வடிக்கப்பட்டு வந்தது போல் இங்கிலாந்தின் செல்வம் வடிக்கப்பட்டிருப்பின், அதுவும் தரித்திர நிலைமையை அடைந்திருக்கும். இங்கிலாந்தே அந்த கதியை அடைந்திருக்குமாயின், நாள் ஒன்றுக்கு வேலையாட்கள் இரண்டு மூன்றணு சம்பளம் வாங்குகிற இந்தியா இந்த முறையை எப்படித் தாங்கமுடியும்" என்று மார்டின் தமது நூலில் சொல்லியிருக்கிறார். வங்காளத்தின் நிலைமையைக் கணக்குகள் மூலமாக விசாரித்தறிவிக்கும்படி 1807-ம் வருஷத்தில் டாக்டர் புச்சானன் என்பவர் நியமிக்கப்பட்டார். அந்த வேலையை அவர் 1807-ம் வருஷத்தில் ஆரம்பம் செய்து 1813-ம் வருஷத்தில் முடித்தார். பேகார், பாட்னு, ஸகபாத், பகல்பூர், தினஜ்பூர் கோரக்பூர், பூர்னியா, ரங்பூர், அஸ்ஸாம் ஆகிய ஜில்லாக்களைப்பற்றிய விசாரணையே முடிவாயிற்று. அந்த ஜில்லாக்களின் விஸ்தீரணம் 60-ஆயிரம் சதுர மைல். ஜனத்தொகை ஒன்றரைக் கோடி. டாக்டர் புச்சானன் சேகரம் செய்த தகவல்களை 1816-ம் வருஷத்தில் சீமைக்கனுப்பினர். அந்த வேலையைச் செய்ய 30-ஆயிரம் பவுன் செலவாயிற்றாயினும், டாக்டர் புச்சானன் அனுப்பிய தஸ்தாவேஜிகள் இருபது வருஷகாலம் கவனிக்கப்படாமற் கிடந்தன. அந்த தஸ்தாவேஜிகளைச் சோதனை செய்து பார்க்கும்படி 1837-ம் வருஷத்தில் ராபர்ட் மங்கமரி என்பவர் அதிகாரிகளிடமிருந்து அனுமதிபெற்றுக் கொண்டு, தஸ்தாவேஜிகளைச் சோதனை செய்து அவற்றில் சொல்லப்பட்டிருந்த விஷயங்களை ஆதாரமாகக் காட்டி ஒரு சரித்திர மெழுதினர். தேசத்தைப் பற்றிய ஸகல தகவல்களும் இந்த நூலில் விஸ்

தாரமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. இந்த நூல் இப்பொழுது அரிதாகவே காணப்படு மாகையால், மேற் சொன்ன ஜில்லாக்களில் நூற்பதும் நெய்வதும் இருந்த நிலைமையைப் பற்றி அந்தச் சரித்திரத்திலிருந்து பல விஷயங்களை எடுத்துக் காட்டுகிறேன். ஒவ்வொரு ஜில்லாவைப் பற்றியும் அவர் சொல்லியிருக்கிற கணக்குகளையும் அவர் சொல்லியுள்ள அபிப்பிராயங்களையும் சொல்லுகிறேன். அவைகளிலிருந்து உங்களுக்குத் தோன்றும் தீர்மானங்களுக்கு வரலாம்.

அந்தச் சரித்திரத்தின் முற்பாகத்தில் கயா உள்பட பாட்னு ஜில்லாவைப் பற்றியும் ஷகபாத் ஜில்லாவைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

## பாட்னு.

பாட்னு ஜில்லாவில் நூலின் பொருட்டு சாகுபடி செய்யப்படும் பயிர்களில் பருத்தியே முக்கியமானது. 24-ஆயிரம் *பிகா விஸ்தீரணமுள்ள பூமிகளில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அந்த பூமிகளில் 19-ஆயிரம் பிகா விஸ்தீரணமுள்ள பூமிகளில் வேறு பயிர் சாகுபடி செய்யப்படவில்லை; ஐயாயிரம் பிகா விஸ்தீரணமுள்ள பூமிகளில் வேறு பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டிருந்தன. பலவகைப் பருத்திச் செடிகளை இந்த ஜில்லாவில் காணலாம். ராக்கியா, வர்ஷா, புஜா என்ற வகைகளே எங்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. யசோகர் என்ற தினுஸு நொவடா என்ற இடத்தில் மாத்திரம் சாகுபடி செய்யப்படுகின்றது. இந்த தினுஸுகள் எல்லாம் ஒரு ஜாதியைச் சேர்ந்தவைகளே. அவைகள் எல்லாம் பல வருஷங்கள் இருக்

---

* முக்கால் பிகா ஒரு ஏகருக்குச் சமயான விஸ்தீரணம்.

கக் கூடியவை யாயினும், அவைகளைப் பல வருஷங்கள் வைத்துக் கொண்டிருப்பது சாகுபடி செய்யத் தெரியாதவனுடைய செய்கையாகக் கருதப்படுகிறது. பருத்தியிலுள்ள விதைகளை ஸ்திரீகள் பிரித்தெடுத்து விடுகிறார்கள். விதைகளை வைத்துக் கொண்டு விவசாயியானவன் பருத்தியை விற்று விடுவான். பருத்தியை நூலாக ஸ்திரீகளே நூற்கிறார்கள். விதையை அவர்கள் பிரித்தெடுப்பதால் சேத மேற்படுகிறது. மாடுகளுக்கு நல்ல புஷ்டியை இந்த விதை கொடுக்கக்கூடியது. திருஜ்பூர் ஜில்லாவில் விளையும் பருத்தியைவிட பாட்ணு ஜில்லாப் பருத்தி மட்டமான தாயினும், மேற்கிந்தியாவில் விளையும் பருத்தியைவிட மேலானது; ஆகையால் அதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஆனால் தேவைக்குத் தகுந்த அளவு பாட்ணுப் பருத்தி சாகுபடி செய்யப்படவில்லை.

நூலும் வஸ்திரமும் உற்பத்தி செய்யப்பட்டதைப்பற்றி பின் வருமாறு அவர் சொல்லியிருக்கிறார்:—

"இந்த ஜில்லாக்களில் நெய்யப்படும் வஸ்திரங்கள் பருத்தி நூலைக் கொண்டே அநேகமாக நெய்யப் படுகின்றன. அதற்காக உபயோகப்படுத்தப்படும் பருத்தி தேசத்திலேயே விளைகிறது. நூல் நூற்கும் ஸ்திரீகளே பெரும்பாலும் பருத்தியை ஆய்ந்து அதை அடித்து அதிலுள்ள கொட்டைகளை எடுத்து விடுகிறார்கள். தூணியா என்ற ஜாதியார் பருத்தியிலுள்ள கொட்டைகளை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள்; அவர்களும் சிறிது பாகத்தை ஆய்ந்து கொட்டைகளை எடுக்கிறார்கள், பாக்கியை வில்லினால் அடித்துக் கொட்டைகளை எடுக்கிறார்கள்.

"ஒவ்வொரு ஜில்லாவிலும் நூற்றுக்கு எத்தனை ஸ்திரீகள் நூல் நூற்கிறார்கள், ஒவ்வொருவரும் எவ்வளவு பருத்தி நூற்பார்கள், அப்படி நூற்ற நூலின் கிரய மென்ன வென்று நான் கணக்கெடுக்கச் சொன்னேன். ஐந்தில் ஒரு பங்கு ஸ்திரீகள் நூற்கக் கூடிய வயதுள்ளவர்கள் என்று வைத்துக் கொண்டால், மூன்று லட்சத்து முப்பதாயிரம் ஸ்திரீக்ள் நூல் நூற்பவர்களாவார்கள். அவர்களில் பெரும்பாலோர் மத்தியானத்துக்குப்பிறகு சிறிது நேரமே நூற்கிறார்கள். சராசரிக் கணக்குப்பார்த்தால், ஒரு வருஷத்தில் ஒரு ஸ்திரீ நூற்கும் நூலின் கிரயம் ரூ. 7-2-8 ஆகும். அந்தக் கணக்கின்படி எல்லா ஸ்திரீகளும் ஒரு வருஷத்தில் நூற்கும் நூலின் கிரயம் ரூ. 23,67,277 ஆகும், பருத்தியின் கிரயம் ரூ. 12,86,272 ; ஆகையால் அவர்கள் அடையும் லாபம் ரூ 10,81,105 ; அதாவது தலைக்கு ரூ. 3-4-0 ; ஆனால் சில ஸ்திரீகள் ஓயாமல் நூற்கிறார்கள், குழந்தைகளாலும் குடும்பங்களாலும் அவர்களுடைய வேலை தடைப்படுகிறதில்லை. அவர்கள் மேற்சொன்ன தொகையைவிட அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். நூல் சன்னமாக இருப்பதற்குத் தகுந்தபடி அவர்களுடைய சம்பாத்தியம் பெரிதாக விருக்கிறது. எத்தனை தறிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கின்றன என்றும், ஒவ்வொரு தறிக்கும் எவ்வளவு நூல் ஒரு வருஷத்திற்கு வேண்டு மென்றும், அதன் கிரயம் என்ன வென்றும் கணக்கெடுத்தேன். பருத்தி வஸ்திரங்களுக்காக ரூ. 22,29,979 பெறுமானமுள்ள நூலும், கலப்பு வஸ்திரங்களுக்காக ரூ. 1,01,762 பெறுமானமுள்ள நூலும் நாடாக்கள், ஜம்காளங்கள், கூடாரங்கள், கயிறுகள்

முதலியவைகளுக்காக ரூ. 37,125 பெறுமானமுள்ள நூலும், தையல் நூலுக்காக ரூ. 2000 பெறுமான முள்ள நூலும் ஆகமொத்தம் ரூ 23,70,866 ரூபாய் பெறுமானமுள்ள நூல் தேவையாக விருப்பதாகத் தெரிந்தது. இவ்வளவு நூலும் இந்தியாவில் எங்கும் காணப்படும் சிறிய ராட்டினங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. பருத்தியை ஆயவும் அடிக்கவும் உபயோகப் படுத்தும் கருவிகள் எங்கும் ஒரு மாதிரி யாகத்தான் இருக்கின்றன. நூல் நூற்பதால் அந்தஸ்து குறைந்துபோய் விடுகிறதாக ஒருவரும் நினைப்ப தில்லை."

பருத்தி வஸ்திரங்கள் நெய்ய இந்த ஜில்லாவில் 24,352 தறிகள் இருந்ததாக அனுபந்தத்தில் சொல் லப்பட் டிருக்கிறது.

## ஸகபாத் ஜில்லா

ஸகபாத் ஜில்லாவைப்பற்றிப் பின்வரும் விவரங்கள் காணப்படுகின்றன :—

"இந்த ஜில்லாவில் நெசவு காரர்கள் அநேகமாகப் பருத்தி வஸ்திரந்தான் நெய்கிறார்கள். எனக்குக் கிடைத்த கணக்குகளின்படி, உபயோகப்படுத்தப் படும் பருத்தியில் நூற்றில் 28 பங்கு இந்த ஜில்லா விலேயே விளைகிறது. அவ்வளவு பருத்தியிலுள்ள விதைகளேயும் நூல் நூற்கும் ஸ்திரீகளே எடுத்து விடு கிறார்கள். ஆனால் தூனியா என்கிற ஜாதியார் பருத் தியை நூலாக நூற்பதற்கு முன் அதை வில்லினால் அடித்து விடுகிறார்கள். எவ்வளவு நூல் நூற்கப்படு கிற தென்று கணக்கெடுக்க முயன்றேன். 1,59,500 ஸ்திரீகள் தங்களுடைய நேரத்தில் பாதியை நூல் நூற்

பதில் உபயோகப் படுத்துகிறதாகவும், ஒவ்வொரு ஸ்திரீயின் பிரயாசையின் பயனாக ரூ. 8 கிடைக்கிற தென்றும் தெரிந்தது. நூற்கப்படும் நூலின் மொத்தக் கிரயம் ரூ. 12,50,000. பருத்தியின் கிரயமும், அதை அடிக்கிறதற்குக் கூலியும் சேர்ந்து ரூ. 10,14,000 ஆகிறது. ஆகையால் நூல் நூற்கும் ஒவ்வொருவருக் கும் வருஷமொன்றுக்கு ரூ. 1-8-0 தான் லாபம் கிடைக் கிறது. ஆனால் பாட்னா, பேகார் ஜில்லாக்களில் ரூ. 7-2-8 பெறுமானமுள்ள நூலே ஒவ்வொருவராலும் ஒரு வருஷத்தில் நூற்கப்படுகிறதாயினும் ரூ. 3-4-0 லாபம் கிடைக்கிறது. மேற்சொன்ன லாபந் தவிர, பருத்தி விதையை விற்பதால் கிடைப்பதும் அவர்களைச் சேரு கிறது. ஜில்லா முழுமைக்கும் பருத்தி விதையின் கிர யம் ரூ. 14,000 ஆகிறது. அதிலிருந்து ஒவ்வொரு ஸ்திரீக்கும் சராசரி 2 அணு கிடைக்கும். இந்த ஜில்லாவில் நெய்யப்படும் வஸ்திரங்களின் விலை ரூ. 16,34,000 ஆகிறது. அதற்கு ரூ. 12,00,000 பெறு மானமுள்ள நூல் தேவையாக இருக்கிறது. எனக் குக் கிடைத்த கணக்கின்படி இந்த ஜில்லாவில் 7025 பருத்தி நெசவுக்காரர்களுடைய வீடுகள் இருக்கின் றன. அவர்களுக்குச் சொந்தமாக 7025 தறிகள் இருக் கின்றன. வேலை செய்யக் கூடியவர்களாக 7950 பெயர் களுக் கதிகமாக அந்த வீடுகளில் இருக்கிறதாகவும், பாக்கிப் பெயர்கள் விவசாய வேலை செய்கிறதாகவும் தெரிகிறது."

ஸகபாத் ஜில்லாவின் பருத்தி விளைவைப்பற்றி அனுபந்தத்தில் பின்வரும் விவரங்கள் காணப்படு கின்றன. ரார்ஹியா, பரேஸா என்ற இரண்டு தினுசு கள் தான் சாகுபடி செய்யப்படுகின்றன:—

| | | பிகா |
|---|---|---|
| ரார்கியா தனியாக | ... | 4905 |
| மாஸூடன் கலந்த ரார்கியா | ... | 4390 |
| பட்டாணியுடன் கலந்த ரார்கியா | ... | 5000 |
| பட்டாணி ஸரிஷாவுடன் கலந்த ரார்கியா | ... | 7850 |
| ஸரிஷாவுடன் கலந்த ரார்கியா | ... | 800 |
| பட்டாணியுடனும் டோரியுடனும் கலந்த | ... | 700 |
| டோரியுடன் கலந்த ரார்கியா | ... | 350 |
| பரிஸா தனியாக | ... | 40 |
| இதர தானியங்களுடன் கலந்த பரிஸா | ... | 840 |
| ஆக மொத்தம் | | 24,875 |

## பகல்பூர் ஜில்லா

"இனி, பகல்பூர் ஜில்லாவைப்பற்றி டாக்டர் புச்சானன் சொல்லி யிருப்பதைக் கவனிப்போம்:—

இங்கு எல்லா ஜாதியினரும் நூல் நூற்கலாம். கங்கையோரத்திலுள்ள நாட்டில் ராஜ்மகால் தவிர மற்ற இடங்களில் ஸ்திரீகள் அநேகமாக நூல் நூற்பதாகவும், அவர்களில் சிலர் பகல் முழுமையும் நூற்பதாகவும், பெரும்பாலோர் சிறிதுகாலம் நூற்பதாகவும் தெரிகிறது. நூல் முழுமையும் மோட்டாவாக இருக்கிறது. சிறிய ராட்டினத்தைக்கொண்டே நூற்கப் படுகிறது. 1,60,000 ஸ்திரீகள் நூல் நூற்பதாகக் கணக்கிலிருந்து தெரிகிறது. ஒவ்வொரு ஸ்திரீயும் 16 சேர் பருத்தியை ஒரு வருஷத்தில் நூற்பதாகவும், அதன் கிரயம் ரூ. 6-9-3 என்றும், அதில் ரூ. 4-8-3 லாபம் என்றும் தெரிகிறது. எப்பொழுதும் நூற்கும் ஸ்திரீகள் அதைவிட அதிகமாக சம்பாதிப்பது சகஜமே

யாகும்; வேறு வேலைகளுமுள்ள அநேகர் அதை விடக் குறைவாகவும் சம்பாதிக்கிறார்கள்.

"இந்த ஜில்லாவில் நூலின் பொருட்டு சாகுபடி செய்யப்படும் பயிர்களில் பருத்தியே முக்கியமானது. ஜில்லாவின் உட்பாகங்கள் அதற்கு ஏற்றவைகளா யிருக்கின்றன; ஆகையால் வேறிடங்களிலிருந்து பருத்தி வரவழைக்க அவசிய மிருக்கக்கூடாது. சம தரையில் 12 ஆயிரம் பிகா விஸ்தீரணமுள்ள பிர தேசத்திலும் மலைகளில் ஏராளமாகவும் பருத்தி சாகு படி செய்யப்படுகிறது; ஆயினும் இதர இடங்களி லிருந்தும் ஏராளமாக வரவழைக்கப்படுகிறது.

"இந்த ஜில்லாவில் 6212 வீடுகளில் நெசவு செய் யப்படுகிறதாகவும், 7279 தறிகள் இருப்பதாகவும் தெரிகிறது என்று டாக்டர் புச்சானன் சொல்லி யிருப்பதன் மேல் அவரது யாதாஸ்தைப் பிரசுரம் செய்த மிஸ்டர் மார்ட்டின் பின்வருமாறு வியாக்கி யான மெழுதி யிருக்கிறார்:—

"நீராவி இயந்திரங்களைக்கொண்டு நெய்யப்பட்ட பருத்தி வஸ்திரங்களின் மீது வரி வசூல் செய்யாமல் அவை இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுவதன் பலனாக, சுதேசத் தொழில் பெரும்பாலும் நாசமாகி விட்டது; (ஆனால் இந்தியாவிலிருந்து வந்து இங்கி லாந்தில் இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை, காபி, மிளகு, சாராயம் முதலிய சாமான்களின் பெறுமானத் தின் மேல் நூற்றுக்கு நூறு முதல் முந்நூறு வரையில் நாம் வரி விதித்திருக்கிறோம்.) பகல்பூர் ஜில்லாவில் காட்டு மிராண்டிப் பிராந்தியங்களில் நூற்கப்படும் நூல் அங்குள்ள ஸ்திரீகளுக்குச் சொந்தமானது. அவர்கள் நெசவுகாரனுடைய பிரயாசைக்குப் பிரதிப் பிர

யோஜனமாக முழத்துக்கு இவ்வளவு நூல் என்று கொடுக்கிறார்கள். ஜில்லாவின் பண்படுத்தப்பட்ட இடங்களில் மேற்சொன்ன நிபந்தனையின்மேலேயே வெகு வேலை செய்யப்படுகிறது. ஆனால் அநேகம் நெசவுகாரர்கள் நூலைக் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டு துணிகளை விற்றுவிடுகிறார்கள். அதற்காக எவரும் அச்சாரம் கொடுக்கவில்லை. நெய்யப்படும் துணியில் அரையே அரைக்கால் பங்கு நெசவுகாரனுடைய சொந்தப் பொறுப்பின்மேல் நெய்யப்படுகிறது; காலே அரைக்கால் பங்கு நூல் நூற்கிறவர்களின் பொருட்டு நெய்யப்படுகிறது.''

## கோரக்பூர் ஜில்லா

கோரக்பூர் ஜில்லாவைப்பற்றி டாக்டர் புச்சானன் பின்வரும் விவரங்களைச் சொல்லியிருக்கிறார்:

'இந்த ஜில்லாவில் நூற்கப்படும் பருத்தி அநேகமாக வேறிடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது; கொட்டையெடுத்த பருத்தியே இறக்குமதி செய்யப்படுகிறது. துனியாக்கள் பருத்தியை ஆய்ந்து வில்லினால் அடித்துச் சுத்தம் செய்கிறார்கள்; பிறகு தான் ஸ்திரீகள் அதை நூற்க ஆரம்பம் செய்கிறார்கள். சில பெரிய ஊர்களில், இறக்குமதி செய்யப்படும் பருத்தியைத் துணியாக்கள் கிரயத்துக்கு வாங்கி, கொட்டை யெடுத்துவிட்டு, சில்லரையில் விற்கிறார்கள். ஆனால் இந்த ஜில்லாவில் இறக்குமதி செய்யப்படும் பருத்தியில் பெரும்பாகத்தை ஸ்திரீகளே கொட்டை யெடுக்காத ஸ்திதியில் வாங்கி, துணியாக்களைக் கொண்டு கொட்டை யெடுத்துச் சுத்திசெய்த பிறகு அதை நூற்கிறார்கள். 11,75,600 ஸ்திரீகள் ரூ. 11,06,

250 பெறுமானமுள்ள நூலே நூற்பதாகக் கணக்கெடுக்கப்பட்டது. இவ்வளவு நூல் நூற்பதற்காகச் சில்லரையில் வாங்கப்படும் பருத்தியின் விலே ரூ. 6,45,554. ஆகையால் நூற்பதற்காக ஒரு வருஷத்தில் ஒரு ஸ்திரீக்குக் கிடைப்பது ரூ. 6-4-0.

"இந்த ஜில்லாவில் மோட்டா வெள்ளேத் துணிகளே நெய்கிருர்கள். 5145 நெசவுகாரர்களின் வீடுகளும் 6114 தறிகளும் இந்த ஜில்லாவில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த ஜனங்கள் உபயோகப்படுத்தும் வஸ்திரங்களின் கிரயம் 19 லட்சம் ரூபாய்க்குக் குறையாது. அதில் ஒரு லட்சத்து 55ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ளது இறக்குமதிசெய்யப்படுகிறதாகத் தெரிகிறது; 35 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வஸ்திரங்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறதாகவும் சொல்லப்படுகிறது. ஆனல் 35 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வஸ்திரங்கள் தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பது பிசகென்றும், நேப்பாளம் ஒன்றுக்கு மாத்திரம் சுமார் 70 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வஸ்திரங்கள் இந்த ஜில்லாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதாகவும் நம்ப இடமிருக்கிறது. நெசவுகாரர்கள் நெய்யும் வஸ்திரங்களில் பெரும்பாகம் நூல் கொடுக்கும் ஸ்திரீகளின் பொருட்டு நெய்யப்படுகிறது; நெசவுகாரனுக்கு அவர்கள் கூலி கொடுத்து விடுகிருர்கள். 24 முழம் நீளமும், $1\frac{3}{4}$ முழம் அகலமும், 600 இழைகள் பாகில் உள்ளதுமான ஒரு வஸ்திரத்தை நெய்ய 6 அணு கூலியென்று நவாப் கஞ்சியில் சொன்னுர்கள். இம்மாதிரி வஸ்திரங்களில் ஐந்து அல்லது ஆறு ஒரு மாதத்தில் தான் நெய்வதாக ஒரு நெசவுகாரன் சொன்னுன்.

இந்த ஜில்லாவில் பருத்தி சிறிது சாகுபடி செய்யப்படுகிறது. தேவைக்கு அது போதவில்லை. ஸகபாத் ஜில்லாவில் எவ்வளவு சிரத்தையுடன் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறதோ அவ்வளவு சிரத்தையுடன் இங்கு சாகுபடி செய்யப்படவில்லை. ஜேத்வா, குக்தி என்று இரண்டு தினுஸுகள் பயிரிடப்படுகின்றன. ஜேத்வாதான் மிகுதியாக சாகுபடியாகிறது. ஸகபாத் ஜில்லாவில் பயிராகும் பரீஷாவும் இதுவும் ஒன்றுதான். பரீஷாவைப்போல், மழைநாளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுடன் கலந்து இதுவும் சாகுபடி செய்யப்படுகிறது. குக்தி என்னும் செடியிலிருந்து கிடைக்கும் பருத்தி வர்ணமுள்ளதாக இருக்கிறது; அதைக்கொண்டு ஒருவகை வஸ்திரம் நெய்கிறார்கள்.'

## திஞ்ஜ்பூர் ஜில்லா

திஞ்ஜ்பூர் ஜில்லாவை அடுத்தாற்போல் எடுத்துக் கொள்வோம். அது ஒன்றைத்தான் டாக்டர் புச்சானன் சுற்றிப்பார்த்து விஷயங்களைத் தெரிந்து கொண்டார். ஆகையால் அவர் சொல்லும் விஷயங்களை ஜாக்கிரதையுடன் கவனிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் சொல்லுகிறதாவது:

“கம்பெனி நடத்திவைக்கும் தொழில்களின் நிலைமை கவர்ன்மெண்டுக்குத் தெரியும்; ஆகையால் தொழில்களின் பொருட்டு அவர்கள் உபயோகப் படுத்தும் மூல தனத்தைக் குறைத்துவிட்டதால், தொழில்கள் எப்படி பாதிக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தவிர மற்ற விஷயங்களை நான் பிரஸ்தாபிக்கவில்லை. வியாபாரி அல்லது வியவசாயி யிடமிருந்து

பருத்தியை வாங்குகிறவர்களைப் பற்றி முதலில் சொல்லுகிறேன்.

"துளுரா என்று ஒருவகை ஜனங்கள் இருக்கிறார்கள். கொட்டை எடுத்த பருத்தியைச் சுத்திசெய்வது அவர்களுடைய தொழில். வில் போன்ற ஒரு கருவியின் நாணைக்கொண்டு பருத்தியை அடித்து அவர்கள் மேற் சொன்ன வேலையைச் செய்கிறார்கள். அப்படிச் செய்வதால் பருத்தி நார்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிராமல் தனித்தனியாகப் பிரிந்து போகின்றன. பருத்தியிலுள்ள கொட்டைகளை எடுத்துப் பருத்தியை ஆய்ந்து சுத்தம் செய்யும் வேலை அதை நூற்கிற ஸ்திரீகளால் செய்யப்படுகிறது; அதற்காக சிறிய வில் ஒன்றை அவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

"பருத்தி நூல் நூற்பது ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. உயர் குலத்து ஸ்திரீகளும் வியவசாயிகளின் ஸ்திரீகளும் ஓய்வு நேரத்தில் இந்த வேலையையே செய்கிறார்கள். பிராமண ஸ்திரீகளும் இங்கு இந்த உபயோகமான வேலையைச்செய்கிறார்கள். நெசவு, தோல் பதனிடல் முதலிய தொழில்களில் வேலை செய்யும் ஸ்திரீகள் தவிர மற்ற எல்லா ஸ்திரீகளுமே நூல் நூற்கிறார்கள். குடியானவர்களின் மனைவிகள் தான் அதிகமாக நூற்கிறார்கள், மத்தியானத்திற்குப் பிறகு இந்த வேலையையே அவர்கள் செய்கிறார்கள். இந்த ஜில்லாவில் உபயோகப்படுத்தப்படும் பருத்தியில் மூன்றில் இரண்டுபங்கு மேற் கிந்தியாவிலிருந்து பகவன்கோவா வழியாக வருகிறது. இந்தப் பிரதேச ஜனங்களில் அநேகர் நார்மடி என்ற வஸ்திரத்தை உபயோகிக்கிறார்கள். அதை நெய்யும்

பொருட்டு நாருடன் கலந்துகொள்ளச் சிறிது பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஜில்லாவில் விளையும் பருத்தி விலையில் உயர்ந்ததாகையால், இறக்குமதி செய்யப்படும் பருத்தியின் கிரயம் உபயோகப் படுத்தப்படும் மொத்தப் பருத்தியின் கிரயத்தில் ஐந்தில் மூன்று பங்குதானிருக்கும்.

"ஆத்ரேயிக்குக் கிழக்கில் திஞஜபுருக்குத் தெற்கில் விளையும் பருத்தி அந்தப் பிரதேசத்தின் தேவைக்குப் போதுமானது. ஏற்கெனவே நான் சொல்லியிருப்பதுபோல், இறக்குமதி செய்யப்படும் பருத்தியைவிட அது உயர்ந்தது.

" இறக்குமதி செய்யப்படும் பருத்தி கொட்டை எடுக்கப்பட்டது. பெரிய வியாபாரிகள் மொத்தமாக வாங்கி சில்லரையில் விற்கிருர்கள். 82 ராத்தல் நிறையுள்ள ஒரு மணங்கின் விலை ரூ. 18. சில்லரை வியாபாரிகள் பருத்தியை மணங்குக் கணக்காக வாங்கி ரூபாய்க்கு நான்கு ராத்தல் வீதம் நூல் நூற்கும் ஸ்திரிகளுக்கு விற்கிருர்கள். அவர்கள் நூலை நெசவுகார்களுக்கு விற்கிருர்கள்; தங்களுடைய குடும்ப உபயோகத்துக்கு வஸ்திரம் நெய்ய நூல் வேண்டுமாயின், நூலை அவர்கள் விற்கமாட்டார்கள். இவ்வாறு இந்தத் தொழில் செய்யப்படுவதற்கு, மூலதனம் விசேஷமாகத் தேவையில்லை. இறக்குமதி செய்கிற வியாபாரி மாத்திரம் மூலதனம் வைத்துக்கொள்ள வேண்டியவனுக இருக்கிருன். பருத்தி சாகுபடி செய்யப்படும் இடங்களில் குடியானவர்களுடைய ஸ்திரீகளே அநேகமாக அதை நூற்றுவிடுகிருர்கள். பருத்தியைக் குடியானவர்கள் சில்லரையாக வாரச் சந்தையில் விற்று விடுகிருர்கள். ஆகையால் மூல

தனம் போடாமலே தொழில் நடந்து விடுகிறது. இந்தத் தொழிலின் பொருட்டு உபயோகப் படுத்தப் படும் மூலதனம் பலரிடமிருந்து சிறிது சிறிதாகக் கிளம்புவதால், தொழிலில் மூலதனம் உபயோகப் படுத்தப் படுகிறதாகவே தெரியவில்லை.

"பருத்தியிலிருந்து கொட்டையை எடுக்க இந்தியாவில் உபயோகப்படுத்தப்படும் கை இயந்திரத்தையே ஸ்திரீகள் உபயோகிக்கிறார்கள்; பிறகு வில்லினால் பருத்தியை அடித்து, கையினால் சுழற்றப்படும் ஒரு உருளையைக்கொண்டு நூல் நூற்கிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்தும் கருவிகள் எல்லாம் அரை குறையானவைகளே.

இந்த ஜில்லாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியின் கிரயம் ஒரு லட்சம் ரூபாய் இருக்குமென்று நான் மதிப்பிட்டிருக்கிறேன், அதில் 80 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி நேர்த்தியானது. இந்த நேர்த்தியான பருத்தியில் ஒரு பாகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நேர்த்தியான பருத்தி மால்டா என்ற இடத்தில் இறக்குமதி செய்யவும் படுகிறது. ஆகையால் 80 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி இந்த ஜில்லாவில் நூற்கப்படுகிறதாக வைத்துக்கொள்ளலாம். அப்படி நெய்யப்படும் நூலின் கிரயம் நான்கு லட்சம் ரூபாயாகும். ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மோட்டாப் பருத்தியும் இறக்குமதி செய்யப்படுகிறது; அதன்றி இந்த ஜில்லாவில் 20 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள மோட்டாப் பருத்தி விளைகிறது. இவ்விரண்டும் நூலாகி விட்டதும் அதன் கிரயம் ரூ 76,61,000 ஆகிறது. நூல் நூற்கிறவர்கள் வாங்கும் பருத்தியின் மொத்தக்

கிரயம் ரூ. 2,50,000. நூற்கிறவர்கள் விற்கும் அல்லது தாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளும் நூலின் கிரயம் ரூ. 11,65,000. ஆகையால் நூல் நூற்பதால் கிடைக்கும் லாபம் 9,15,000.

எத்தனை ஸ்திரீகள் இந்த ஜில்லாவில் நூல் நூற்று வந்தனர் என்று டாக்டர் புச்சானன் சொல்லவில்லை. மற்ற ஜில்லாக்களில் அவர் அனுசரித்த கணக்கின்படி ஒவ்வொரு ஸ்திரீக்கும் சராசரியில் மூன்று ரூபாய் கிடைத்ததாக வைத்துக்கொண்டால், 3,05,000 ஸ்திரீகள் நூல் நூற்றிருக்கவேண்டும்; ஒவ்வொரு ஸ்திரீயும் நான்கு ரூபாய் சம்பாதித்ததாக வைத்துக்கொண்டால், 2,28,750 ஸ்திரீகள் நூல் நூற்றிருக்கவேண்டும். எப்படியாயினும் அவர்கள் தொகை இரண்டு லட்சத்துக்குக் குறையாது, மூன்று லட்சத்துக்கு மேற் போகாது. நெசவுத்தொழிலைப்பற்றி டாக்டர் புச்சானன் சொல்லியிருப்பதை இனிக் கவனிப்போம்:—

"நெசவு செய்வதையே தொழிலாகக்கொண்ட குடும்பங்கள் ஆறாயிர மிருக்கலாம், அவர்களுக்குள் எண்ணாயிரம் தறிகளிருக்கலாம்; ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு புருஷனுக்கும் ஒரு தறி இருக்கிறது. ஆனால் ஜாதியில் நெசவுக்காரர்களல்லாத பலரும் இந்தத்தொழிலை மேற்போட்டுக் கொண்டு விட்டதால், அந்தக் குடுபங்களிலுள்ள சில புருஷர்கள் விவசாயத்தொழில் செய்கிறார்கள், மற்றவர்கள் நெசவு செய்கிறார்கள். ஒரு மாதத்தில் ஒவ்வொரு மனிதனும் நெய்யும் நூலின் கிரயம் 8 ரூபாயாகும்: ஒரு தறியில் 144 ரூபாய் பெறும் வஸ்திரம் நெய்யப்படும். மால்டாவிலுள்ள 500 தறிகளையும் சேர்த்து 8500 தறிகளி

ஆம் ரூ. 1,22,41,000 பெறுமானமுள்ள வஸ்திரங்கள் நெய்யப்படுகின்றன.

"சுதேச ஜனங்களுக்காக நெசவுக்காரர்கள் நெய்யும் வேஷ்டிகள் மெல்லிய ஸல்லாக்கள்; அவைகளின் ஓரங்களில் ஊதாக்கறை போடப்பட்டிருக்கிறது; அவை அகலக்கட்டையாக விருப்பதால், மிகவும் மலிவாக இருக்கின்றன. 10 முழ நீளம் 2 முழ அகலமுள்ள ஒரு வேஷ்டி மூன்றரை ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரையில் விற்கிறது. கீழ் வகுப்பு ஹிந்துக்களும் முகம்மதியர்களுமாகிய விவசாயிகளில் அநேகருடைய வீடுகளில் தறிகள் இருக்கின்றன. ஒழிவு நேரத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் அந்தத்தறிகளில் மோட்டாத்துணிகளை நெய்கிறார்கள். இவ்வாறு நெய்யப்படும் துணிகளின் மொத்தக் கிரயம் 4,50,000 ரூபாய் ஆகும்.

ஆகையால் இந்த ஜில்லாவில் நெய்யப்படும் பருத்தி வஸ்திரங்களின் மொத்தக்கிரயம் ரூ.16,74,000 ஆகிறது. அதில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளது ஏற்றுமதி செய்யப்படுகிறது. பாக்கியுள்ளதாகிய ரூ. 15,14,000 பெறுமானமுள்ள துணிகள் இந்த ஜில்லா ஜனங்களாலேயே உபயோகிக்கப்படுகின்றன. இந்த ஜில்லாவில் நூற்கப்படும் நூலின் கிரயம் ரூ. 11,65,000 ஆகும். அதில் பட்டுக்கலப்பு வஸ்திரங்களுகாக 65 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ளது உபயோகப்பட்டுப் போகிறதாக வைத்துக் கொண்டால், நெசவுக்காரர்களுக்குக் கிடைக்கும் லாபம் ரூ. 5,74,000 ஆகிறது."

பருத்தி நூலைக் கொண்டு வஸ்திரம் உற்பத்தி

செய்வதைப்பற்றி டாக்டர் புச்சானன் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"பருத்தி வஸ்திர உற்பத்தி மிகவும் முக்கியமானது, செழித்தோங்கி வருகிறது. ஏற்றத்தாழ்வு அதற்கு அதிகமாக ஏற்படுகிறதில்லை. ஏனெனில் உற்பத்தி செய்யப்படும் வஸ்திரத்தில் பெரும்பாகம் இந்த ஜில்லாவிலேயே விற்றுப் போய் விடுகிறது. ஏற்றுமதி முற்றிலும் நின்றுபோய் விடினும் இந்தத் தொழில் அதிகப் பாதகமடையாது; இப்பொழுது சிறிது இறக்குமதியு மாகிக் கொண்டிருக்கிறது; ஏற்றுமதி நின்று போய் விடின், அண்டை அயலாருடைய தேவைகளுக்கேற்ற துணிகளை நெசவுக்காரர்கள் நெய்வார்கள்.

"மால்டாவிலும் அதன் சுற்று வட்டத்திலும் நெசவுக்காரர்களுடைய வீடுகளாக 120-வீடுகள் இருக்கின்றன. அவர்கள் மஹ்மல் என்று சொல்லப்படும் மெல்லிய வஸ்திரங்களையும் தலைப்பாகைகளையும் நெய்கிறார்கள். அம்மாதிரி வஸ்திரங்களை இந்த ஜில்லாவில் நெய்கிறவர்கள் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. அவர்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிலும் ஒன்று முதல் ஏழுதறிகள் வரையில் இருக்கின்றன. மொத்தமாக அவர்களுக்குள் 360 தறிகள் இருக்கலாம். ஈஸ்டு இந்தியா கம்பெனியிடமிருந்தோ அல்லது கல்கத்தாவிலும் மூர்ஷிடபாத்திலுமுள்ள இதர வியாபாரிகளிடமிருந்தோ இந்த மகமல்களுக்காக அவர்கள் அச்சாரம் பெற்றுக் கொள்ளுகிறார்களாம். ஆயினும் அவர்கள் நெய்யும் மகமல், தலைப்பாகை முதலிய வஸ்திரங்களில் பாதி ரொக்க விற்பனைக்காகவே தயார் செய்யப்படுகிறது. மொத்த விற்பனைத் தொகை சுமார் 50-ஆயி

ரம் ரூபாயாகும். அச்சாரத்தின் மேல் நெய்யப்படும் வஸ்திரங்கள் நான்கு முழநீளமும் இரண்டு முழஅகலமு முள்ளவைகளாக இருக்கின்றன. நீட்டுப் போக்கில் அதாவது பாகில் 12-ஆயிரம் முதல் 15-ஆயிரம் இழைகள் வரையில் உள்ளவைகளாக இருக்கின்றன: ஒவ்வொரு துண்டின் விலை 12-ரூபாய் முதல் 16-ரூபாய் வரையில் ஆகிறது. (44 அங்குல அகல முள்ளதும் 40-வது நம்பர் நூலினால் நெய்யப்பட்டதுமான வஸ்திரத்தில் 1200 முதல் 2200 இழைகள் வரையில் பாகில் உள்ளன) ஈஸ்டு இந்தியா கம்பெனியார் ஒதுக்கி விடும் துண்டுகள் ரொக்க விலைக்கு உடனே விற்றுப் போகின்றன. முதல் தரத் துணிகளுக்கு கம்பெனியார் கொடுக்கும் விலை அவர்களால் ஒதுக்கப் பட்ட வஸ்திரங்களுக்கும் கிடைத்து விடுகிறது."

## தினஜ்பூர் ஜில்லா

தினஜ்பூர் ஜில்லாவில் பருத்தி சாகுபடி செய்யப் படுவதைப் பற்றி டாக்டர் புச்சானன் சொல்லி யிருப்பதை விஸ்தாரமாகக் கீழே காணலாம். இந்த முக்கியமான பண்டம் எப்படி உற்பத்தி செய்யப்பட்டதென்பது அதிலிருந்து விளங்கும். விவசாயித்திலும் பருத்தி சாகுபடியிலும் சிரத்தை யுள்ளவர்களுக்கு அது மிகவும் உபயோகமாக விருக்கும்:—

"25 ஆயிரம் பிகா விஸ்தீரணமுள்ள பூமியில் பருத்தி சாகுபடியாகிற தென்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். இந்த ஜில்லாவின் வடபாகத்தில் மஞ்சளுடன் சிறிது பருத்தி சாகுப்படியாகிறது; ஆனால் அது மிகவும் மட்டமான சரக்கு. அதிகமாக விளையவுமில்லை, சில இடங்களில் இந்த மட்டப்

பருத்தி தனிமையாகவும் சாகுபடி செய்யப்படுகிறது. குடியானவன் வீட்டுப் பெண்டிர் எவ்வளவு நூற்கக் கூடுமோ அவ்வளவு பருத்திதான் இம்மாதிரி சாகுபடி செய்யப்படுகிறது. கோடை மழை பெய்ததும் பூமியை உழுது, சிறிது சாணி எருப் போட்டு, பரம்படித்து மே மாதக் கடைசியில் விதை விதைத்து மறுபடியும் உழுது, பரம்படித்து விடுகிறார்கள். இரண்டு மூன்று முறை களை எடுக்கிறார்கள். ஆகஸ்டு மாத மத்தியிலிருந்து அக்டோபர் மாத மத்திக்குள் பருத்தியைச் செடிகளிலிருந்து பறித்து விடுகிறார்கள். இம்மாதிரி சாகுபடி செய்வதானது மிகவும் அற்பப் பலன் தருவதாயிருப்பதால், அதை விட்டு விவசாயிகள் இனி நான் சொல்லப் போகும் முறையை அனுஷ்டிப்பார்களாயின், மிகவும் நல்ல பலன் அடைவார்கள்.

"இந்த ஜில்லாவின் தென்கிழக்கு பாகத்தில் ஒரு விதப் பருத்தியை சாகுபடி செய்கிறார்கள். மேற்கிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியை விட அது சிலாக்கியமானதாக இருக்கிறது; ஆகையால் அதன் சாகுபடியைக் கைதூக்கிவிடவேண்டும். முதல்தரமானதும் மேட்டுப் பாங்கானதுமான பூமியில் அது சாகுபடி செய்யப்படுகிறது. கெட்டியான பூமியிலும் பருத்தியையே சாகுபடிசெய்கிறார்கள், மணல் பாங்கான பூமியிலும் சாகுபடி செய்கிறார்கள். கெட்டியான பூமியில் பருத்தி நன்றாக விளைகிறது, மணல் பாங்கான பூமியில் அதனுடன் கலந்த மற்றப்பயிர்கள் நல்ல பலன் தருகின்றன. மணல் பாங்கான பூமியில் எப்படிப் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறதென்பதை முதலில் வருணிக்கிறேன்:—

"முதல் தரமான பூமியில் மூன்று வருஷத்திற்

கொருமுறை பல பயிர்களை வரிசையாகச் சாகுபடி செய்கிறார்கள். அந்த மூன்று வருஷத்தில் 16 மாத காலம் கரும்பும், ஏழு மாதகாலம் கோடை நெல்லும், ஒன்பது மாதகாலம் பருத்தி கடுகுகளும், நான்கு மாதகாலம் நவதானியங்களும் சாகுபடி செய்யப்படு கின்றன. மறுபடி அதே மாதிரி வரிசையாக சாகு படி செய்கிறார்கள். இந்த வரிசைக்கிரமம் சிறிது மாறுகிறது முண்டு; ஆனால் இதுதான் சாதாரண மான அப்பியாசம். கடுகை சில சமயங்களில் நிறுத் திக்கொண்டு, பருத்திக்கு மூன்றுவது களை எடுத்த பிறகு, நவதானியங்களை அதனிடையில் விதைத்து விடுகிறார்கள். இப்படி செய்யப்படும் பொழுது, பருத்தி விளைவு அதிகமாக விருக்கிறது.

"ஆகஸ்டு மாத மத்தியிலிருந்து ஸெப்டம்பர் மாத மத்திக்குள் நெற்பயிரை அறுத்துவிட்டு, பூமியை உடனே உழுது விடுகிறார்கள். ஆறு முறை இரண்டு சால் அடித்தபிறகு, சிறிது சாணி எருப்போட்டு, குளங்களிலிருந்து எக்கல் மண் கொண்டு வந்து போடு கிறார்கள். அக்டோபர் மத்தியிலிருந்து நவம்பர் மத்திக் குள் பருத்தி விதை இருபதுபடிக்கு ஒருபடி கடுகு வீதம் கலந்து விதைத்துப் பரம்படித்து, விதையானது பூமிக்குள் மறைந்து போகும்படி செய்கிறார்கள். பருத்தி விதையை விதைக்கிறதற்கு முன், முக்கால் மணிநேரம் அதை ஊற வைத்துச்சிறிது மணலைச் சேர்த்துக் குலுக்குகிறார்கள். அப்படிச் செய்வதால், விதைகள் ஒன்றுடனொன்று ஒட்டிக் கொள்ளாமல் தனித்தனியாகப் பிரிந்து போகின்றன. ஒரு மாதங் கழித்து முதற் களை எடுக்கிறார்கள். ஜனவரி மாதக் கடைசி அல்லது பிப்ரவரி மாத ஆரம்பத்தில் கடுகு

முற்றி விடுவதால், அதைப் பறித்துக்கொண்டு அப்பொழுது ஒரு முறை களை எடுத்துவிடுகிறார்கள். ஒரு ஏகர் பூமியில் அதாவது முக்கால் பிகா விஸ்தீரணத்தில், கொட்டை உள்பட 300 ராத்தல் நிறையுள்ள பருத்தியும் 300 ராத்தல் நிறையுள்ள கடுகும் கிடைக்கின்றன. ஏப்ரல் 12-ந் தேதியிலிருந்து ஜூன் 12-ந் தேதிக்குள் பருத்தியை எடுத்து விடுகிறார்கள்.

"கெட்டியான களிமண் பூமியில் தான் அதிகமாகப் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. ஜில்லாவின் கிழ்ப்பாகத்திலும் தென் பாகத்திலுமே இந்த சாகுபடி செய்யப்படுகிறது. வடபாகத்திலும் மேற்கு பாகத்திலும் இதே சாகுபடியைச் செய்வார்களாகில் நல்ல பலன் உண்டாகும். குளங்களுக்கருகில் மேட்டுப்பாங்கான களிமண் பூமி ஏராளமாக இருக்கிறது. பூமி செழிப்புள்ளதாக விருந்தால், அதே வருஷத்தில் கோடை நெல்லும் அதில் சாகுபடி செய்கிறார்கள். அல்லது நாற்றுவது அதில் உற்பத்தி செய்து கொள்ளுகிறார்கள். அக்டோபர் மாத ஆரம்பத்தில் பூமியை உழுது, பருத்தி விதையுடன் கடுகையும் முள்ளங்கியையும் கலந்து விதைத்து விடுகிறார்கள். சணலையும் குசும்பாவையும் சில வரிசைகள் விதைப்பதுமுண்டு.

"ஜனவரி மாதக் கடைசி அல்லது பிப்ரவரி மாத ஆரம்பத்தில் எண்ணெய் விதைகளைப் பறித்துக் கொண்டு, பூமியைக் கொத்தி, சாணி சாம்பல் குளத்துப் பொறுக்கு பிண்ணாக்கு முதலியவைகளை எருப் போடுகிறார்கள். பிறகு, மழையில்லாத காலததில் பத்து நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். நான்கு பெயர்கள் ஒரு நாளில் ஒரு ஏகர் பூமிக்குத்தண்ணீர் பாய்ச்சி விடுவார்கள். ஜூன்மாத

மத்தியில் பருத்தி எடுக்கிறார்கள். ஏகர் ஒன்றுக்கு 360 ராத்தல் முதல் 500 ராத்தல் வரையில் பருத்தி விளையும். எண்ணெய் விதைகளின் கிரயம் மிகவும் சொற்பமாகவே இருக்கிறது."

பூர்னியா அஸ்ஸாம் ஜில்லாக்களில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வந்ததைப்பற்றி டாக்டர் புச்சானன் சொல்லியிருப்பதை இனிமேல் கவனிப் போம். பூர்னியா ஜில்லாவைப்பற்றி அவர் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"நூல் நூற்பதானது கண்ணியக் குறைவான வேலை என்று எந்த ஜாதியாரும் இந்த ஜில்லாவில் நினைக்க வில்லை. மற்ற வேலைகள் இடங்கொடுத்தால் ஸ்திரீகள் அநேகமாக ஒவ்வொரு நாளும் நூல் நூற்கிறார்கள். ஆனால் ஸதாகாலமும் நூற்கிறவர்கள் அதிக மில்லை. ஜில்லாவின் தென் கிழக்கு பாகத்தில் நேர்த்தியான நூல் சிறிது நூற்கப்படுகிறது; ஆனால் மோட்டா நூல்தான் அதிகமாக நூற்கப்படுகிறது. ஸன்ன நூல் இரும்பினால் செய்யப்பட்ட உருளையைக் கொண்டும், மோட்டா நூல் ராட்டினத்தைக் கொண்டும் நூற்கப்படுகின்றன. நெல் குத்தாமல், நூல் நூற்பதையும் சமையல் செய்வதையும் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளுகிறதையும் மாத்திரம் செய்யும் ஒரு ஸ்திரீ ஒரு மாதத்தில் ஒன்றே முக்கால் சேர் நேர்த்தியான நடுத்தர நூலை நூற்கக் கூடுமென்று பொலஹாத் என்ற இடத்தில் கேள்விப்பட்டேன். அந்த நூல் 1½ சேருக்கு ரூ. 1-2-8 வீதம் விற்கிறது. அவள் 8 அணாவுக்குக் கொட்டையுடன் 5 சேர் பருத்தி வாங்கி, தானே கொட்டை யெடுத்துப் பட்டை போட்டு விடுகிறாள். 10½ அணா அவளுக்கு லாபம்

கிடைக்கிறது. ஒரு சேர் என்பது இரண்டு ராத்த லுக்குச் சிறிது குறைவாக விருக்கும். ஸன்ன நூல் நூற்கிறவர்கள் ஒரு சேர் பருத்தியை வாங்கி, அதைச் சுத்தி செய்து, அதைக்கொண்டு காலே வீசம் சேர் நிறையுள்ள நூலை நூற்கிறார்கள். அதன் கிரயம் ஒரு ரூபாய். பருத்தியின் கிரயம் ஒரு அணு ஏழு பைஸா வாகையால் அவர்களுக்கு 14 அணு 5 பைஸா லாபம் கிடைக்கிறது. நல்ல அந்தஸ்திலுள்ள ஸ்திரீகள் தான் இந்த வேலையைச் செய்கிறார்கள், அவர்கள் வேறு வேலை செய்கிறதில்லை.

"ஆனால் மேற்கிந்தியாவிலிருந்து இறக்குமதிசெய் யப்படும் பருத்தியைக் கொண்டே நூல் அதிகமாக நூற்கப்படுகிறது. துலாகஞ்சு என்ற இடத்தில் ஒரு ரூபாய்க்கு $1\frac{3}{4}$ சேர் வீதம் சாதாரண நூல் விற்கிறது. ஒரு சேர் நூலுக்கு $1\frac{1}{2}$ சேர் சுத்திசெய்த பருத்தி வீதம் நெசவுக்காரர்கள் கொடுக்கிறார்கள். வீசம் பங்கு நூற்பதில் சேதமாகி விடுகிறது. ஆகையால் ஒன்றரைச் சேர் பருத்தியை நூற்பதால் ஒன்றே காலே மூன்று வீசம் சேர் நூல் கிடைக்கிறது. அதன் விலை $14\frac{1}{2}$ அணு. இந்த நூலை நூற்க ஒரு ஸ்திரீக்கு ஒரு மாதமாகிறது. ஒரு ரூபாய்க்கு $1\frac{3}{4}$ சேர் வீதம் பருத்தி விற்பதால், 100 ரூபாய்க்குப்பருத்தி வாங்கி நூற்பதால் 174 ரூபாய் பெறுமானமுள்ள நூல் கிடைக் கிறது. மோட்டா நூலைப்பற்றின வரையில் இது தான் உள்ள நிலைமை. காளிகஞ்சுக்குச் சமீபத்தி லுள்ள ஸ்திரீகள் மூங்கிலால் செய்த ஒரு கதிரில் சிறிது மண்ணை ஒரு முனையில் அப்பி அந்தக் கதிரைக் கொண்டு ஸன்னமான நூலை நூற்கிறார்கள். அதற் கான பருத்தி மேற் கிந்தியாவிலிருந்து வருகிறது.

அதைச் சுத்தி செய்வதில் கால்பங்கு சேதமாகி விடு கிறது. அதன் கிரயம் நூலின் கிரயத்தில் வீசம் பங்காகிறது."

எவ்வளவு நூல் நூற்கப்பட்டுவந்தது, அதன் கிரயமென்னவென்ற விஷயங்கள் இனி சொல்லப்படு கின்றன:—

"நேர்த்தியான வஸ்திரங்கள் நெய்ய உபயோகப் படுத்தப்படும் நூலின் கிரயம் ரூ. 57,000 ஆகிறது. அந்த நூலை நூற்பதற்காக உபயோகப்படுத்தப்படும் பருத்தியின் கிரயம் அதில் பத்தில் ஒரு பங்கு தானு கும். இதைத்தவிர, ரூ. 9,43,000 பெறுமானமுள்ள மோட்டா நூலும் உபயோகப்படுத்தப்படுகிறது. அதற்குபயோகப்படுத்தப்படும் பருத்தியின் கிரயம் அதில் பாதி இருக்கலாம். ஆகையால் 5-12,000 ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி உபயோகப்படுத்தப் படுகிறது. தாங்கள் நெய்யும் துணிகளினுல் தங்களுக் குக் கிடைப்பதை நெசவுக்காரர்கள் மிகவும் குறைத் துச் சொல்லுகிறுர்கள்; அவர்களுடைய காலட் சேபத்துக்குப் போதாததாக அவர்கள் சொல்லும் தொகை இருக்கிறது. அதற்கு அவர்கள் ஏதோ காரணம் சொல்லுகிறுர்கள். ஆனல் 13 லட்சம் ரூபாய் பெறக் கூடியதைவிட அதிகமான துணிகளை நெய்கிறதாகவும், எவ்வளவு பருத்தி உபயோகப் படுத்தப்படுகிறதென்று சொல்லுகிறுர்களோ அதை விட அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறதாகவும் நான் நினைக்கிறேன். நூலின் கிரயத்தில் நூற்றுக்கு 38க்குக் குறைவாகப் பருத்தியின் கிரயம் இராது. இந்த ஜில்லாவில் நூல் நூற்கும் இலட்சத்து 87 ஆயிரம் ஸ்திரீகளுமாகச் சேர்ந்து 10 லட்சம் ரூபாய்க்

குக் குறைவாக சம்பாதிக்கிறார்கள் என்று நம்பமுடிய வில்லை. 10 லட்சம் ரூபாய் அவர்கள் சம்பாதிக்க 6 லட்சம் ரூபாய் கிரயமுள்ள பருத்தியையாவது அவர் கள் உபயோகப்படுத்த வேண்டும்."

இதற்கப்புறம் வேறு சில கணக்குகளை டாக்டர் புச்சானன் சொல்லிவிட்டு, ஒரு தறியினால் வருஷம் ஒன்றுக்கு 109 ரூபாய் சம்பாத்தியமிருக்க வேண்டு மென்று முடிவு செய்திருக்கிறார். பிறகு அவர் சொல் லுகிறதாவது :—

"மேற் சொன்ன காரணங்களைக்கொண்டு கவனித் தால், சில சமயங்களில் நேர்த்தியான துணிகளையும், மற்றக்காலத்தில் மோட்டாத் துணிகளையும் நெய்யும் 3500 தறிகள் 5 லட்சத்து ஆறுயிரம் ரூபாய் பெறு மானமுள்ள துணிகளை நெய்கிறதாகத் தெரிகிறது. அந்தத்துணிகளை நெய்கிறதற்காக 3 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நூல் உபயோ கப்படுத்தப்பட வேண்டும். மோட்டா வஸ்திரங்கள் நெய்யும் பத்தாயிரம் தறிகளும் 10 லட்சத்து 89 ஆயி ரத்து 500 ரூபாய் பெறுமானமுள்ள வஸ்திரங்களை நெய்யும். அதற்காக 7 லட்சத்து 65 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமானமுள்ள நூல் உபயோகப்படுத்தப் படும். தாங்கள் இவ்வளவு நெய்கிறதாக நெசவுக்காரர் கள் ஒளிக்காமல் சொல்லிவிட்டதாக வைத்துக்கொண் டாலும், 11 லட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமானமுள்ள நூலை அவர்கள் உபயோகப்படுத்த வேண்டும். அதைத்தவிர பட்டுக்கலப்பு வஸ்திரங் களுக்காக ஒன்றரை லட்சம் ரூபாய் பெறும் நூல் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆகையால் இறக்குமதி செய்யப்படும் சிறிது நூலைத்தவிர இந்த ஜில்லாவி

லேயே உற்பத்தி செய்யப்படும் நூலாக 13 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளது உபயோகப்படுத்தப்படுகிறது."

இந்தத்தறிகள் தங்களுக்காகவே வேலே செய்யும்படி ஈஸ்டு இந்தியா கம்பெனியார் எப்படிச்செய்து கொண்டார்கள் என்பது கீழே சொல்லப்படுவதிலிருந்து விளங்கும் :—

"பருத்தி நாலினுல் நெய்யப்படும் வஸ்திரங்களே நெய்கிறவர்கள் ஏராளமாக இருக்கிறூர்கள். தேச ஜனங்களின் உபயோகத்துக்காக மோட்டாத்துணிகளேயே அவர்கள் நெய்கிறூர்கள். அவர்கள் நெய்வதில், காஸா என்ற வெள்ளே வஸ்திரம் ஒன்றுதான் நேர்த்தியானது. அது 40 முழநீளமும் 2 அல்லது 3 முழ அகலமுமுள்ளதாக இருக்கிறது. அதன் கிரயம் 6 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் ஆகிறது. ஆதியில் கம்பெனியார் இம்மாதிரி வஸ்திரங்களேயே மிகுதியும் வாங்கினுர்கள். ஆனுல் 1808-09 ம் வருஷத்தில் 8000 ரூபாய் பெறுமானமுள்ள சலவை செய்யாத 1100 மடிகள்தான் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. இந்த மாதிரி வஸ்திரங்களே நெய்கிறவர்களிடத்தில் 3500 தறிகள் இருக்கின்றன. அவைகளில் 2400 தறிகள் புருஷர்களால் வேலே செய்யப்படுகின்றன. கம்பெனியார் வாங்கிக்கொள்ளக் கூடிய வஸ்திரங்களே அவர்கள் நெய்யக்கூடியவர்கள். அவர்கள் ஏற்கெனவே மாதமொரு மடி வீதம் கம்பெனிக்கு நெய்து கொடுத்துக்கொண்டு வந்தனர்; ஒழிந்த நேரத்தில் தேச ஜனங்களுக்காக மோட்டா வஸ்திரங்களேயும் அவர்கள் நெய்வார்கள். கம்பெனியார் தவருமல் அச்சாரம் கொடுத்து வந்ததால், அதைப்பெற்றுக்

கொள்ள நெசவுக்காரர்கள் ஆவலுள்ளவர்களாக இருந்தனர். வேறு வேலை கிடைத்தால், அதிகச் சம்பாத்தியம் அவர்களுக்குக் கிடைக்கும்; வேறு வேலை கிடைக்காத சமயங்களில் கம்பெனியின் வேலையைச் செய்து முடிப்பார்கள். மற்ற இடங்களில் நெய்யப்படும் வஸ்திரங்கள் தேச ஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய மோட்டா வஸ்திரங்களே. அந்த வஸ்திரங்களை நெய்கிறவர்கள் நூலைக் கிரயத்துக்கு வாங்கி வாரந்தோறும் சந்தையில் துணிகளை விற்றுவிடுகிறார்கள்."

பருத்தி சாகுபடி இனி வருணிக்கப் படுகிறது:—

"இந்த ஜில்லாவில் சாகுபடிசெய்யப்படும் பருத்தியானது மிகவும் மட்டமானது. குத்தி, பல்குனி, பாதுாயி, தில்கி, பாரா, பகரு முதலிய பலமாதிரிப் பருத்திகள் சாகுபடியாகிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு தினுஸுக்கே பலபெயர்கள் பல இடங்களில் வழங்குகிறதாக நான் நினைக்கிறேன்.

"குத்தி என்பது தான் மிகவும் முக்கியமானது; நாங்கீன் என்று சொல்லப்படும் துணியின் நிறம் அந்தப்பருத்திக் கிருக்கிறது. சீனர்கள் நாங்கீன் என்ற துணியை நெய்ய இதே பருத்தியைத் தான் உபயோகப் படுத்துகிறதாகத் தெரிகிறது. பாதுாயி என்ற பருத்தியும் இதே மாதிரியானது தான் என்று கேள்விப்படுகிறேன். அதன் நிறமும் குத்தியின் நிறமும் ஒன்றாகவே இருக்கின்றன; ஆனால் பாதுாயி பலன் தரும் பருவம் ஒன்று, குத்தி பலன்தரும் பருவம் ஒன்று.

"பல்குனியின் நிறம் சிவப்பென்று சிலர் சொல்லுகிறார்கள்: ஆனால் அது ஒரு பருவத்தில் பலன் தரு

கிறது. இந்தப் பருத்தி இங்கிலாந்தில் உபயோகப் படுமா என்று பார்க்க வருஷா வருஷம் கவர்ன்மெண் டார் ஒரு கட்டுப்பருத்தியை அனுப்புவது நலமாகும். தினஜ்பூரிலும் ரங்கபூரிலும் மழை நாளில் வளரும் பருத்திதான் இந்த ஜில்லாவில் திப்கி எனப்படுகிறது, பகரு என்பது கோடைக்காலத்தில் வளருகிறது, அப் பருத்தி நல்லதாக இருக்கிறது. இந்த ஜில்லாவில் விளையும் பருத்திகளிலெல்லாம் மேலானது பாரா என் பது தான். இதைச்சாகுபடி செய்வதில் சிரமமே யில்லை; ஏனெனில் இதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை; மேலும் செடியானது இரண்டு வருஷகால மிருக்கிறது. இரண்டாவது வருஷத்தில் ஒரு முறை கொத்திவிட்டால், அந்த வருஷத்திலும் பலன் தந்து விடுகிறது. ரங்கபூர் ஜில்லாவில் பரோ வனி என்ற இடத்தில் 144-ராத்தல் பருத்தியி லிருந்து 30-ராத்தல் நூலும் ஹர்னியாலோலாகாத் என்ற இடத்தில் 100-ராத்தல் பருத்தியிலிருந்து 35-ராத்தல் நூல் நூற்கப்பட்டதையும் நான் நேரில் பார்த்தேன்.

பருத்தி சாகுபடி விஸ்தீரணங்கள் அடியில் சொல்லப்படுகின்றன :—

| | | பிகா |
|---|---|---|
| பாதுாயி தனியாக | ... | 700 |
| பல்குனி தனியாக | ... | 125 |
| பாரா தனியாக | ... | 3400 |
| பகரா தனியாக | ... | 2075 |
| திக்பி தனியாக | ... | 760 |
| குத்தி வேறு பயிர்களுடன் | ... | 300 |
| பாரா வேறு பயிர்களுடன் | ... | 25 |

| | | |
|---|---|---|
| திக்பி கோடை நெல்லுடன் | ... | 200 |
| பகரா ஆளி விதைச் செடியுடன் | ... | 150 |
| பகரா வேறு பயிர்களுடன் | ... | 50 |
| திக்பி மஞ்சள் முதலியவைகளுடன் | ... | 75 |
| ஆகூ மொத்தம் | | 7860 |

மேற் சொன்ன விஸ்தீரணத்தில் விளைந்த பருத்தியின் கிரயம் ரூ. 88,950 என்று டாக்டர் புச்சானன் மதிப்பிட்டார். ஒரு லட்சத்து 86-ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், 19-ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகளே இறக்குமதி செய்யப்பட்டதாகவும் டாக்டர் புச்சானன் சொல்லியிருக்கிறார். 39-ஆயிரத்து 650-ரூ. பெறுமானமுள்ள பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், 2-லட்சத்து 44-ஆயிரத்து 500-ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். பட்டு நெசவுக்காரர்கள் 150-பெயர்களும், பட்டையும் பருத்தியையும் கலந்து நெசவு செய்வோர் 6950-பெயர்களும், பருத்தி நெசவுக்காரர்கள் 13,555-பெயர்களும் அந்த ஜில்லாவில் இருந்தனராம்.

ரங்கூபூர் ஜில்லாவைப்பற்றிய விவரங்களை டாக்டர் புச்சானன் சொல்லவில்லை. 1040-பிகா விஸ்தீரணமுள்ள பூமியில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டதாக அவர் அனுபந்தத்தில் சொல்லியிருக்கிறார். பட்டுப்பூச்சி வளர்ப்பது அந்த ஜில்லாவில் பிரபலமாயிருந்ததாம். பட்டுப்பூச்சிகளின் ஆகாரத்திற்காக மல்பரி முதலிய தழைகள் 17,593-பிகா விஸ்தீரண

முள்ள பூமியில் சாகுபடி செய்யப்பட்டு வந்தனவாம். பருத்தி வஸ்திரங்கள் நெய்யவும் 6755-தறிகள் இருந்தனவாம். 21600-ஸ்திரீகள் நெசவுத் தொழிலை செய்து வந்தார்களாம். 52-ஆயிரத்து 560-ரூபாய் பெறுமானமுள்ள சுத்தி செய்தபருத்தியும், ஒரு லட்சத்து 78-ஆயிரம் ரூபாய். பெறுமானமுள்ள கொட்டை எடுக்காத பருத்தியும் இறக்குமதி செய்யப்பட்டனவாம்.

அஸ்ஸாமில் பருத்தி மிகுதியாக சாகுபடி செய்யப்பட்ட தென்பதைத்தவிர விவரங்கள் சொல்லப்படவில்லை. ஸ்திரீகளும் புருஷர்களும் இடுப்பில் கட்டிக்கொள்ள சிறுதுண்டுகள் நெய்ததைத் தவிர அந்த ஜில்லா ஜனங்கள் வேறு நெசவு செய்யவில்லையாம்.

மேற் சொன்ன மேற்கோள்களிலிருந்து பல கணக்குகளும் பல விஷயங்களும் விளங்குகின்றன. அவைகளின் மேல் நாம் ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும்.

---

## அத்தியாயம் IV.

### ப்ரிட்டிஷ் வியாபார முறையினால் சேர்ந்த நாசம்.

விவசாயத்திற்கு அடுத்தபடியில், நூல் நூற்பதும் நெசவுசெய்வதும் தேச ஜனங்களின் முக்கியமான தொழில்களாக இருந்தனவென்பது நிச்சயம். துணிகளை உற்பத்தி செய்ய மிகவும் ஆச்சரியகரமான ஏற்பாடு இருந்து வந்தது. வீட்டுக் குடித்தனத்திற்கு ஒரு பாதகமும் செய்யாமல், ஜனங்களுக்குத் தேவையான வஸ்திரங்களை நெய்வதும், மிஞ்சியதை ஏற்றுமதி செய்வதும் அந்த ஏற்பாட்டின் பலனாக விருந்தது.

ஏராளமாக நெசவு செய்யப்பட்டு வந்தபோதிலும், அதற்காக முதல் போட்டு வேலைசெய்யவேண்டிய அவசியமிருந்ததில்லை; ஆகையால் பணக்கிராக்கி முதலிய காரணங்களினுல், தொழிலுக்கு ஒரு பாதகமும் ஏற்படக் கூடியதல்ல. டாக்டர் புச்சானன் ஜில்லாக்கள் தோறும் சுற்றிப்பார்த்துக் கணக்கெடுத்த காலத்தில் இந்தத் தொழிலானது மிகவும் க்ஷீணதசையை அடைந்திருந்தது. ஆனுல் அந்த ஸ்திதியிலும் தேசத்திற்குத் தேவையான வஸ்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. இந்தத் தொழிலானது தானுக நசித்துப் போய்விடவில்லை; மேலான யோக்கியதையுள்ள வேறு தொழிலுடன் போட்டி போட்டுத் தோற்றுப்போய் நசிக்கவுமில்லை; ஆனுல் தேசத்தில் ஆதிக்கம் பெற்றுவிட்ட அன்னிய ஜாதியினருடைய வர்த்தக அசூயையானது இந்தியாவின் நெசவுத் தொழிலின் குறவளையை நெறித்துக் கொன்றுவிட்டது. "நீங்கள் நெசவு செய்வதை நிறுத்தி விடுங்கள், பருத்தியை உற்பத்தி செய்து எங்களுக்குக் கொடுங்கள், நாங்கள் அதை வஸ்திரமாக்கி உங்களுக்கு விற்போம்" என்று அந்த அன்னியர் இந்தியாவுக்குப் புத்திமதி சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.

---

[1768-ம் வருஷத்தில் வாட் என்பவர் நீராவி இயந்திரம் சரியாக வேலை செய்யும்படி அதைப் பூர்ண பக்குவ ஸ்திதிக்குக் கொண்டு வந்தார். விசைநாடாத் தறி 1784-ம் வருஷத்தில் ஆக்ரைட் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. 1785-ம் வருஷத்தில் அதை வேறு எவரும் செய்யக்கூடாதென்று அவர் சந்நது பெற்றுக்கொண்டார். 1803-ம் வருஷத்தில் அது பிரபலமடைந்து எங்கு பார்த்தாலும் உபயோகத்துக்கு வந்துவிட்டது.]

டாக்டர் புச்சானனுடைய சோதனைகளைப் புத் தகமாக வெளியிட்ட மிஸ்டர் மார்ட்டின் என்பவர் முக வுரையில் பின் வருமாறு சொல்லி யிருக்கிறார் :—

" நம்முடைய பேராசையினாலும், சுய நலத் தாலும் கஷ்டத்திற்காளாகி விட்ட ஜனங்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு " டாக்டர் புச்சான னுடைய யாதாஸ்து எழுதப்பட்ட காலத்திலிருந்து இன்று வரையில் இங்கிலாந்திலாவது இந்தியாவிலா வது ஏதேனும் செய்யப்பட்டிருக்கிறதா ? ஒன்று மில்லை. ஆனால் ஆங்கில வர்த்தகர்களின் கொடுமை யான சுய நலத்திற்கு இரையாகி விட்ட நிர்ப்பாக்கிய ஜனங்களுடைய தரித்திரத்தை அதிகப்படுத்த நம்மால் கூடிய எதையும் செய்திருக்கிறோம். டாக்டர் புச் சானன் சுற்றிப் பார்த்த ஜில்லாக்களில் எத்தனை ஜனங் கள் தங்களுடைய வயிறை வளர்க்க நெசவுத்தொழிலை நம்பி யிருந்தார்கள் என்பது அவர் சொல்லியுள்ள கணக்குகளிலிருந்து தெரிகிறது.

வியாபாரத்திற்கு எவ்விதத்தடையு மேற்படுத்தக் கூடாது என்று சொல்லிக்கொண்டு, லங்காஷயர், யார்க்ஷயர், கிளாஸ்கோ முதலிய ஜில்லாக்களில் நீராவியந்திரங்களைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் துணிகளை இந்தியாவில் இறக்குமதி செய்து ஹிந்துக் கள் அவைகளை வாங்கும்படி ஆங்கிலேயர் கட்டாயப் படுத்தி யிருக்கின்றனர். அவைகளின் மீது விதிக்கப் பட்ட இறக்குமதித் தீர்வை பெயருக்கு மாத்திரம் விதிக்கப்பட்டது. ஆனால் வங்காளத்திலும் பிகாரிலும் கையினால் நெய்யப்பட்டவைகளும் அழகான்வைகளும் நாட்பட நிற்கக் கூடியவைகளுமான வஸ்திரங்கள் இங்கிலாந்தில் விற்கப்படக் கூடாமல் மிகவும் கடுமை

யான இறக்குமதித் தீர்வைகள் அவைகளின் மீது விதிக்கப்பட்டுள்ளன. பர்மிங்காம், ஸ்டாபோர்டுஷயர் ஆகிய ஜில்லாக்களில் செய்யப்படும் சாமான்கள் கீழ்த்தேசங்களிலுள்ள தொழிற்காரர்கள் நாசமாகும்படி செய்து விட்டன. இங்கிலாந்தில் குவிந்துவிட்ட செல்வத்தின் பலத்தைக் கொண்டும் நீராவி இயந்திரத்தைக் கொண்டும் செய்யப்படும் தொழில்களுடன் அவர்கள் போட்டி போட்டுத் தோற்றுப் போயினர். தன்னுடைய கழுத்தில் தானே சுருக்கு போட்டுக் கொள்ளுகிறதற்குச் சமமான மூடத்தனத்துடன், இந்தியாவிலிருந்து சர்க்கரை, காபிக்கொட்டை, சாராயம், புகையிலை முதலிய பண்டங்களும் இங்கிலாந்துக்கு வரக்கூடாமல் செய்து விட்டோம். அந்த சாமான்கள் இந்தியாவில் உற்பத்திசெய்யப்பட்டு வந்தால், அடிக்கடி ஜனங்கள் பஞ்சத்துக்கு ஆளாகிவிடுவது தடுக்கப்பட்டிருக்கும். ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடிய மராமத்து வேலை எதையும் நாம் இந்தியாவில் செய்துவிடவில்லை. இரண்டு லட்சம் ஜனங்கள் கொண்ட சேனையையும் பெரிய சம்பளம் பெறும் ஸிவில் உத்தியோகஸ்தர்களையும் சம்ரட்சிக்க வேண்டி வருஷத்தில் 20-கோடி பவுன் செலவிடுவதையே முதல் வேலையாக நாம் கொண்டிருக்கிறோம். வருஷ மொன்றுக்கு 20-அல்லது 30-அல்லது 40-லட்சம் பவுனை சென்ற 50-வருஷ காலமாக இந்தியாவிலிருந்து நாம் வடிக்கட்டிக்கொண்டு வந்திருக்கிறோம். வியாபாரத்தின் பலனாக இங்கிலாந்துக்குப் போய்ச் சேரவேண்டிய பணத்திற்காகவும், கடன்களுக்கு வட்டி கொடுக்க வேண்டியதற்காகவும், இந்தியா சம்பந்தமாக இங்கிலாந்திலுள்ள உத்தியோகஸ்தர்களுக்காகவும்

இந்தியாவில் உத்தியோகம் செய்வோர் சம்பாதிக்கும் பணத்தை இங்கிலாந்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறதற்காகவும் மேற்சொன்ன தொகை வருஷா வருஷம் வடிக்கட்டப்பட்டு வந்திருக்கிறது.

"வெகு தூரத்திலுள்ள இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் முப்பது அல்லது நாற்பது லட்சம் பவுனை வடிக்கட்டி விடுவதால் அந்த தேசத்திற்கு உண்டாகக் கூடிய கஷ்டங்களை எப்படி நிவர்த்தி செய்யலாமென்று மனிதனுடைய யுக்தி கண்டுபிடிக்கக் கூடியதாக விருக்கவில்லை. அந்தத்தொகைக்குப் பதிலாக எதுவும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் போய்ச் சேருகிறதில்லை. இப்படிப் பணத்தை வடிக்கட்டி விடுவதால் விளையும் நாசகரமான பிரயோஜனங்கள் இந்த நூலின் முகவுரையில் சொல்லப்பட்டிருக்கின்றன; அது சரியல்லவென்று ஒருவரும் சொல்லத் துணியவில்லை. மிகப் பிரயாசைப்படுகிறவர்களாயிருந்தும், சாமர்த்திய முள்ளவர்களாயிருந்தும், நாள் ஒன்றுக்கு ஒரு அணு ஒன்றரை அணு இரண்டு அணுவுக்கு அதிகமாக சம்பாதிக்க முடியாதவர்களாகவும், கையில் பணமில்லாத பொழுது தங்களுடைய நிலங்களை உழுது பயிரிடவும் தறிகளில் நெசவுசெய்யவும், பட்டறைகளில் வேலைசெய்யவுங் கூடாதவர்களாக இருக்கிற ஜனங்கள் வருஷ மொன்றுக்கு நூற்றுக்கு 20-முதல் 30-வரையில் வட்டிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கடன் வாங்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடும்பொழுது, அவர்கள் ஒட்டாண்டிகளாகி விடுவது நிச்சயம். இம்மாதிரி நிலைமையிலுள்ளவர்கள் முன்னுக்கு வரமுடியா தென்பதும், இன்றைக்கோ நாளைக்கோ அவர்கள் அடியோடு அழிந்துபோய் விடு

வார்கள் என்பதும் அவர்களிடத்தில் விசேஷப் பழக்க மில்லாதவர்களும் கண்டு கொள்ளக்கூடிய உண்மை கள். இதனுடன் நிற்காமல், வேறு ஒரு அநீதியும் செய்திருக்கிறோம். இங்கிலாந்தில் மலிவாகச் செய்யப்படும் சாமான்களை இந்தியாவில் விற்கப் பல சௌகர்யங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தியாவில் விசேஷப் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு அதிகத் தீர்வை விதிக்கப்பட்டுள்ள சமான்கள் இங்கிலாந்தில் விற்க அதே சௌகரியங்கள் இராமற் செய்து விட்டோம். இதைக் கவனிக்கையில், இந்தியாவில் இருக்கிற கஷ்டத்தையும் அந்த ஜனங்களுக்கு நேரப் போகிற நாசத்தையும் உத்தேசித்து நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை, வங்காளத்தில் உற்பத்தி செய்யப் படும் சர்க்கரை இங்கிலாந்துக்கு வருவதாயிருந்தால் அதன் கிரயத்தைப் போல் ஒன்றரை மடங்கு தீர்வை செலுத்தும்படி செய்திருக்கிறோம்; அத்தேசத்தின் சாராயம் புகையிலை முதலியன எந்த நிபந்தனையின் மேலும் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்படாமல் தடுத்திருக்கிறோம். பணச் செலவு பிடிக்காத ராஜீய ஸ்தாபனங்களை தாராளமாக ஏற்படுத்துகிறோம், ஆனால் வர்த்தக சுதந்தரங்களைப் பற்றின வரையில் இங்கிலாந்து இந்தியாவில் செலுத்தும் ஏதேச்சாதிகாரத்துக்குச் சமமாக எந்தத் தேசமும் எந்தக் காலத்திலும் செலுத்தினதில்லை. நாம் செய்யும் அநீதியானது பிறகு நமது தலையிலேயே விடியும். கொடுமையுடனும் இரக்க மில்லாமலும் இந்தியாவை இங்கிலாந்து நடத்துவதால் அடையும் அற்பப் பிரயோஜனமானது, இப்படியே நாம் செய்துகொண்டு போவோமாயின், பதின்மடங்காக நமக்கு நஷ்டத்தைத் தரும்.

" ஹிந்துஸ்தானத்தில் அமைதியை நிலைநிறுத்துகிறதற்காகத் தெய்வம் இங்கிலாந்தை ஒரு கருவியாக உபயோகப்படுத்தி இருக்கிறது. ஸகல பாக்கியங்களுக்கும் பிறப்பிடமாகிய சமாதானம் இப்பொழுது அங்கு நிலைத்து விட்டது. அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலுள்ள ஒரு சிறிய தீவானது மிகப்பெரிய ராஜ்யமாகிய இந்தியாவைப் பிடித்துக்கொண்டிருப்பதால் அடையும் வன்மையும் சக்திகளும் அளவிடற்கரியன; ஆனால் "எச்சரிக்கை பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கிறது." இப்பொழுது இங்கிலாந்து இந்தியாவுக்குச் செய்து வரும் அநீதியை இன்னும் செய்து கொண்டு போகுமாயின், அது தண்டிக்கப்பட்டு நாசமடைந்து விடும். மனுஷ்ய ஜாதிக்கு இந்தியா தான் தொட்டிலாக இருந்த தேசம்; அங்கு பாலும் தேனும் நெய்யும் வழிந்தோடுகின்றன; உன்னதமான மலைகளையும், ஒரு கரையிலிருந்தபடி மற்றக் கரையைப் பார்க்க முடியாதபடி அகலமாகவுள்ள நதிகளையும், செழிப்பான பூமிகளையும், பிரயாசப்படும் ஜனங்களையும் அது உடையது. புத்திசாலித்தனமும் தைரியமும் நிறைந்த அந்த ஜனங்கள் நாம் செலுத்தும் அதிகாரத்திற்குப் புத்திபூர்வமாகக் கட்டுப்பட்டிருக்கிறார்களே யல்லாமல், நம்முடைய சேனாபலத்திற்குக் கட்டுப்பட் டிருக்கவில்லை. இது வரையில் நாம் என்ன செய்திருந்த போதிலும், நாம் கண்ணிய முடையவர்களென்றும், தருமமாக நடக்கக் கூடியவர்களென்றும் அவர்கள் நம்பிக்கொண் டிருக்கிறார்கள். அமெரிக்காவிற்கு அருகிலுள்ள மேற்கிந்தியத்தீவுகளில் வாழும் சொற்பத் தொகையினராகிய நீக்ரோவர்கள் விஷயத்தில் நாம் காட்டின தரும

சிந்தனையில் பத்தில் ஒரு பங்கை இந்தியாவின் ஜனங்களுடைய நிலைமையை விருத்தி செய்ய நாம் உபயோகப்படுத்தக்கூடாதா? அவர்களை நாம் வெகு காலமாகக் கவனிக்காமலிருந்து வந்திருக்கிறோம்."

மேற்கண்டவாறு மிஸ்டர் மார்டின் சொல்லி விட்டு, வர்த்தகத் துறையில் சமத்துவமேற்படுத்தும் பொருட்டு பின்வருமாறு யோசனை சொல்லியிருக்கிறார்:—

"இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலுமுள்ள துறைமுகங்களுக்கு இந்தியாவில் உற்பத்தியாகும் சாமான்கள் அனுப்பப்படும் பொழுது, நீதியுடன் நாம் நடந்து கொள்ள வேண்டும். இந்திய சாமான்களின் மேல் இங்கு விதிக்கப்படும் தீர்வைகள் ஆங்கில சாமான்களின்மேல் இந்தியாவிலும் விதிக்கப்படவேண்டும். பிரான்ஸ் தேசத்துடன் இந்த நிபந்தனையின்மேல் வியாபாரம் செய்ய நாம் முயற்சி செய்கிறோம், ஆனால் அதே நிபந்தனையை இந்தியாவுக்குப் பிரயோகம் செய்ய மறுக்கின்றோம்" என்று மிஸ்டர் மார்ட்டின் சொல்லியிருக்கிறார்.

மேற்சொன்ன தடை வரிகள் பிறகு நீக்கப்பட்டனவாயினும், அதற்குள் இந்தியத் தொழில்கள் நசித்துப்போய் விட்டன.

இங்கிலாந்தில் ஏற்கெனவே பருத்தித் துணிகள் நெய்யப்பட்டதில்லை. இந்தியாவை இங்கிலாந்து பிடித்துக் கொண்டபிறகுதான், அந்தத்தொழில் அத்தேசத்தில் உண்டாகி வலுவடைந்தது. இந்தியாவில் விளையும் பருத்தியை இங்கிலாந்துக்குக் கொண்டு போய், ப்ரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சொந்தமான தொழிற்

சாலைகளில் அந்தப் பருத்தியை வஸ்திரமாக நெய்து, அதை மறுபடியும் இந்தியாவிற்கு அனுப்பி இங்கு விற்பனை செய்வதானது விபரீதமான வேலையாக இருக்கிறது. இதன் பலன் என்னுகிறதென்றால், இந்தியாவின் ஆட்சியின் பொருட்டு இங்கிலாந்தில் செய்யப்படும் செலவுகளுக்கு இங்கிருந்து பணம் போகிறதல்லாமல், 60 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பருத்தி வஸ்திரங்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. திஞ்ஜபூர் ஜில்லாவைப்பற்றி டாக்டர் புச்சானன் சொல்லியிருக்கிற கணக்குகளைப் பார்த்தால் ஸ்திரீகள் நூல் நூற்று ஒன்பது லட்சம் ரூபாயும் புருஷர்கள் நெசவு செய்து 5 லட்சம் ரூபாயும் வருஷம்தோறும் சம்பாதித்துக் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. ஆகையால் ஒவ்வொரு ஜில்லாவும் சுமார் 15 லட்சம் ரூபாய் வரும்படியை இழந்து விட்டது. இந்தியர் நஷ்டப்பட்டு விட்டதானது பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு லாபமாகி விட்டது. வங்காளத்தில் ஒவ்வொரு ஜில்லாவும் நிலவரியாக சராசரி 16 லட்சம் ரூபாய் செலுத்துகிறது; இந்தத் தொகையை ஜனங்கள் வஸ்திர உற்பத்தி செய்வதால் ஏற்கெனவே சம்பாதித்துக் கொண்டு வந்தார்கள்.

இனி இந்தியர் செய்ய வேண்டிய தென்னவென்பது நிச்சயம். நாம் இருக்க வேண்டுமாயின், வஸ்திர உற்பத்தி செய்வதாகிய பழைய தொழிலைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும். அர்த்த சாஸ்திரக் கொள்கைகளைப் பிரசங்கம் செய்கிறவர்கள் சொல்வதைக் கேட்டு அதைரியமடைந்து விடக்கூடாது. பிறருக்குட்பட்டிருக்கும் ஜாதிக்கு அர்த்த சாஸ்திரம் பிரயோசனமாகாது.

ஒவ்வொரு வீட்டிலும் கைராட்டினமிருக்கும்படி முதலில் செய்யவேண்டும்; அதை ஒரு அலங்காரமாக வைத்திருத்தல் போதாது, ஆனால் குடும்பத்தி லுள்ளவர்கள் அதைக் கொண்டு நூல் நூற்க வேண்டும். ஸ்திரீகள் இந்த வேலையில் சிரத்தை பாராட்ட வேண்டுமென்று அவர்களுடைய மனதில் நாம் பதிய வைக்கவேண்டும். அவர்களுடைய ஓய்வுநேரத்தை யெல்லாம் நூல் நூற்கவே அவர்கள் உபயோகப் படுத்த வேண்டும். அவர்களுக்கு உபதேசம் செய்வதுடன் நின்று விடாமல், நாமும் அதைச் செய்தால், அதைச் செய்ய வேண்டிய அவசியத்தை அவர்களுடைய மனதில் பதியவைத்து விடுவோம். குடியானவர்களுடைய குடும்பங்கள் ராட்டினத்தைக் கொண்டு நூல் நூற்கும்படி நாம் பிரசார வேலைசெய்யவேண்டும். போதுமான நூல் தயாராகி விடின், தறிகள் தாமாக உண்டாகிவிடும்.

இதற்குப் பருத்தி எங்கிருந்து கிடைக்குமென்று கேட்கலாம். இப்பொழுது வங்காளத்தில் பருத்தி சாகுபடியாகவில்லை; வேறிடங்களிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்வதைத் தவிர வேறு வழியில்லை; ஆனால் அப்படிச் செய்வது கட்டாது. பருத்தியின் விலை ஏறிவிட்டதால், வீடுகளில் நூல்நூற்றும் துணிக் கிரயம் மலிவாக இராது.

விவசாயிகளும் விவசாயத்தில் சிரத்தை யுள்ளவர்களும் தங்களுடைய கொல்லைகளில் பருத்தியைச் சாகுபடி செய்யவேண்டும்; நம்முடைய வீடுகளை அடுத்துள்ள இடங்களிலேயே பருத்தி சாகுபடி செய்ய நாம் பிரயத்தனப்பட வேண்டும். ஜனங்களுடைய ஸ்திதி எவ்வளவு தாழ்வானதாக இருந்த

போதிலும், இன்னும் வீடொன்று அவர்களுக்கு இருந்து வருகிறது, ஒவ்வொரு வீட்டின் கொல்லையிலும் சில பூனூல் பருத்திச் செடிகளை சாகுபடி செய்ய அதிகப் பிரயாசைப்பட வேண்டியதில்லை. கார்த்திகை மாதத்தில் வீட்டுக் கொல்லையில் சில பருத்தி விதைகளைப் புதைத்துவிடுவது போதுமானது. இந்தப் பயிர் வேறு எந்தப் பயிருக்கும் ஒரு கேடும் செய்யாது ; ஆடு மாடு செடிகளைத் தின்று விடாமல் பார்த்துக் கொண்டால், அதுவே போதுமானது. ஒரு கொல்லையில் 10-செடி வளர்த்தால் ஆறு மாதத்திற்குள் இரண்டு மூன்று சேர் பருத்தி கிடைக்கும். அடுத்த வருஷத்தில் மகசூல் அதைவிட இரண்டு அல்லது மூன்று பங்காகி விடும், இந்தச் செடிகள் நாலைந்து வருஷம் பலன் தரும். ஆயினும் தட்டாமல் பருத்தி கிடைக்க வேண்டியதற்காக ஒவ்வொரு வருஷத்திலும் புதுச் செடிகளைச் சாகுபடி செய்ய வேண்டும். நன்றாக வளர்ந்துள்ள ஒரு செடியிலிருந்து மூன்று நான்கு சேர் பருத்தி ஒரு வருஷத்தில் கிடைக்கும். ஒரு வீட்டுக்காரனுக்குப் பத்துச் செடியிருந்தால், வருஷத்தில் முப்பது, நாற்பது சேர் பருத்தி கிடைக்கும். அதிலிருக்கிற கொட்டையை எடுத்து விடின், பத்துப் பதினைந்து சேர் சுத்திசெய்த பருத்தி நூல் நூற்கத்தக்கதாகக் கிடைக்கும்.

பதினைந்து நாள் அல்லது ஒரு மாதம் ராட்டினத்தில் பழக்க மேற்பட்டு விட்டால், ஓரளவு நேர்த்தியான நூலாக ஒரு மணி நேரத்தில் ஒரு தோலா நூற்கக் கூடும். ஒரு பெண்மணி நாள்தோறும் ஒரு மணி நேரம் இந்த வேலையைச் செய்தாலே ஒரு மாதத்தில் ஒரு வஸ்திரத்துக்கு வேண்டிய நூல் நூற்று விடுவாள்

ஒருவருக்கு அதிகமாக இந்த வேலையைச் செய்யக் கூடுமானால், ஜாஸ்தி நூல் கிடைக்கும். நூல் உண்டாகிவிடின், தறியா அகப்படாது? சொற்பச் செலவில் நமது நூலை வஸ்திரமாக்கிக் கொண்டுவிடலாம்.

இந்த ஏற்பாடு வேரூன்றிப் பலன்தர சிறிது காலமாகும், ஆயினும் நாம் அதைரியமடைய வேண்டாம். நாம் அந்தரங்க சுத்தியுடையவர்களாக இருப்போமாயின், பலன் நிச்சயம். ஆயினும் இடைஞ்சல் ஏற்படமாட்டாதென்று நினைக்க வேண்டாம். நமக்குள்ளேயே சிலர் இருக்கிறார்கள். அவர்கள் புரளி செய்து நம்மை அதைரியப்படுத்துவார்கள். ப்ரிட்டிஷ் வியாபாரிகளுடைய வியாபாரத்துக்கு இதனால் பாதகமேற்படுமென்று அவர்களுக்குத் தோன்றினதும், அவர்கள் நம்முடைய முயற்சியை எதிர்ப்பார்கள். ஆகையால் இவர்களை யெல்லாம் நாம் எதிர்த்துப் போராடவேண்டியிருக்கும், அதற்குத் தேவையான மன வலிமை இருக்கவேண்டும். அந்த மன வலிமை நமக்கு உண்டாக வேண்டுமாயின், அன்னிய தேசங்களிலிருந்து வரும் அனாவசியமான சாமான்களை ஒதுக்கி விடவும், நாம் நெய்யும் வஸ்திரம் மோட்டாவாக விருந்த போதிலும் சன்னமாக இருந்த போதிலும் அதையே உடுத்திக்கொள்ளவும் பழக்கம் செய்து கொள்ளவேண்டும்.

இயந்திர சாலைகளை வைத்து நடத்துவோர் நம்மவராயிருந்தாலும் அன்னியராயிருந்தாலும், நமக்குப் பரம விரோதிகளாக இருப்பார்கள் என்பது நிச்சயம். அவர்கள் புரளி செய்யக் கூடியதையும் பிரசங்கம் செய்யக் கூடியதையும் நாம் காதில் வாங்கக் கூடாது. நம்முடைய பிரயாசையைக் கொண்டு நாம் உற்பத்தி

செய்யும் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ள நாம் ஒத்துழையாமைக்காரர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை. நீராவி இயந்திரத்துடன் நாம் போட்டி போட வேண்டியதுமில்லை.

இங்கிலாந்தில் நெய்யப்படும் வஸ்திரங்களை விட மட்டமான வஸ்திரங்களை நெய்து இந்தியாவிலுள்ள இயந்திர சாலைக்காரர்கள் பெரிய லாபம் சம்பாதிக்கிறார்கள். நம்முடைய தேசாபிமானத்தை அவர்கள் தங்களுக்கு லாபகாரமாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்; அவர்களுடைய வஸ்திரங்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கிறது. விலையைக் குறைத்துத் தங்களுடைய சாமான்கள் விற்கும்படி செய்ய ப்ரிட்டிஷ் வியாபாரிகள் முயற்சி செய்கிறார்கள். இதனால் கதர் இயக்கத்தைத் தடுத்து விடலாமென்பது அவர்களுடைய கருத்து. இம்மாதிரி நெருக்கடியான சமயத்தில், அதிக லாபம் சம்பாதிக்க நம்முடைய தேசத்து இயந்திரசாலைக்காரர்கள் முயற்சி செய்வது விசனகரமான கார்யம். சிறிது அதிக விலை கொடுத்தாவது தேசத்தில் செய்யப்படும் தொழிலுக்கு ஆதரவளிக்க விரும்புகிறவர்களிடமிருந்து அதிக லாபம் சம்பாதிக்கத் தங்களுடைய சாமான்களின் விலையை நம்முடைய இயந்திர சாலைக்காரர்கள் உயர்த்தி விடுகிறார்கள். ஆகையால் இந்த இடையூறுகளையெல்லாம் சமாளிக்கும்படி நாம் பிரசாரவேலையை முழுமுரமாகச் செய்யவேண்டும்.

நம்முடைய தேசத்தில காலட்சேபத்திற்கு வழியில்லாத விதவைகள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் பிறருடைய தருமத்தையே நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நூல் நூற்கக் கற்றுக் கொடுக்கவேண்டும்;

அவர்களுக்குப் பருத்தி கொடுக்கவும் அவர்களுடைய வீட்டுக் கொல்லைகளில் பருத்தி சாகுபடி செய்யும்படி விதை கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதனுடன், நூலை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கி அதை ஒரு மத்திய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த மத்திய ஸ்தாபனங்களைக் கூட்டுறவுச் சங்கங்களாக அமைத்து விடலாம். அவை நூலை நெசவுக்காரர்களிடம் கொடுத்து, துணியை வாங்கி விற்றுவிட வேண்டும். தங்களுடைய நூலைத் தங்களுக்கே வஸ்திரமாக நெய்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு அதற்கான உதவியைச் செய்யவேண்டும்.

விவசாயிகளும் குடியானவர்களும் சில மாதங்கள் வேலையற்றிருக்கிறார்கள். நூல் நூற்க அவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும், தாங்கள் நூற்கும் நூல் விற்றுப்போய் விடுகிறதாகவோ அல்லது அதைக் கொண்டு தங்களுக்கு வஸ்திரம் நெய்து கொள்ளலா மென்றோ அவர்கள் கண்டு கொண்டால், அந்த வேலை யில் முனைந்து விடுவார்கள்.

இவ்விஷயமாக எனது புத்தியில் பட்டதைச் சொல்லி விட்டேன். வீட்டுக்கொல்லையில் பருத்தி சாகுபடி செய்வதைப் பற்றியும் வீடுகளில் நூல் நூற்பதைப்பற்றியும் என்னுடைய அனுபோகத்திலிருந்து சில கணக்குகளைச் சொல்லியிருக்கிறேன். அவை சரியான கணக்குகளென்று நீங்கள் நம்பவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ராட்டினத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பல வகையான ராட்டினங்கள் இப் பொழுது விற்கின்றன; ஆனால் பழைய காலத்து

ராட்டினமே சிரேஷ்டமானது. (வங்க லட்சுமி ராட்டினமென்று அதற்கு ஒரு கம்பெனியார் பெயர் வைத்திருக்கிறார்கள்) அதன் மேல் ஓடும் கயிறு குறுக்குக் கயிறுகளின் மேல் செல்வதால், அளவு கருவி மாதிரிவேலை செய்கிறது; எவ்வித நூலையும் அதில் நூற்கலாம். இது என்னுடைய அனுபோகம், அந்த ராட்டினத்தில் சீர்திருத்தம் செய்யமுடியாதென்று நான் சொல்ல வரவில்லை.

ஆரம்பத்தில் நேர்த்தியான நூல் நூற்கக் கூடாததிலிருந்து பெண்மணிகள் அதைரிய மடைந்துவிடக் கூடாது. நூல் அழுத்தமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டியதே முக்கியம். மோட்டா நூலைக் கொண்டு படுக்கை விரிப்புகள், ஜமக்காளங்கள், உட் சட்டைகள் முதலியவை நெய்து விடலாம். விடாது நூற்பதால், நேர்த்தியான நூல் நூற்கும் பழக்க முண்டாகிவிடும்.

ராட்டினத்தில் நூல் நூற்பது மிகவும் வேடிக்கையான வேலை. பழைய காலத்தில் வீட்டு வேலையான பிறகு, மாலையில் குடும்ப ஸ்திரீகள் ஒன்று கூடி, நூல் நூற்பது வழக்கம். விளையாட்டாகப் பேசிக்கொண்டே நூலை நூற்பார்கள். பாடவும் பாடுவார்கள். நாவல்கள் எனப்படும் கதைகளைப்படித்தும், தூங்கியும் பொழுதை வீணுக்குவதைக் காட்டிலும், நூல் நூற்பதானது மிகவும் வேடிக்கையான வேலையாக விருக்கும்.

இந்திய ஜனங்களின் சமூகவாழ்வானது இயந்திரங்களைக் கொண்டு செய்யும் தொழில்களுக்குப் பொருத்தமானதல்ல. இயந்திரமானது மனிதனை ஒரு கருவியாகச் செய்துவிடுகிறது; அவனிடத்திலுள்ள மனித சுபாவம் வரவரத் தேய்ந்துபோய் விடு

கிறது. பலவகைப்பட்ட புருஷர்களும் ஸ்திரீகளும் மந்தை போல் ஒன்று கூடுவதால், அவர்களிடத்தி லுள்ள மேன்மையான குணங்கள்போய், மிருகத்தனம் உண்டாகிவிடுகிறது. இயந்திரசாலைகளைச் சேர்ந்த தேன் கூடுபோன்ற குடியிருப்புகளைக் காட்டிலும் ஏழைக் குடியானவனுடைய அற்பக் குடிசையானது நல்ல குணங்களை உண்டுபண்ணுவதாக இருக்கிறது. குடியானவனுடைய குச்சுவீடு அவனுடைய கிருகம்; இயந் திரசாலையைச் சேர்ந்த குடியிருப்பு அவனை அடைத் துப்போட்டிருக்கும் குகை. ஏழையின் குடிசையைச் சூழ்ந்திருக்கும் சுத்தமான ஆகாயமும் இயற்கையின் காட்சியும் மனதிற்கு ரம்யத்தையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் தருவன. இயந்திர சாலைகளைச் சூழ்ந்திருக்கும் புகையும் நிலக்கரித் தூள்கள் நிறைந்த ஆகாயமும் சரீரத்திற்கும் மனதிற்கும் வேதனையைத் தருவன. இயந்திர சாலைகளில் வேலை செய்வோர் அரை அடிமைகள். அவர்களுடைய எஜமானர்கள் அவர்களை அப்படியே கருதுகிறார்கள். அவர்களைக் கொண்டு இயந்திர சாலைகளின் சொந்தக்காரர்கள் பெரிய லாபம் சம்பாதிக்கிறார்கள்; ஆனால் ஏழை வேலைக்காரர்களின் நிலைமை திருந்துகிறதில்லை. இவ் விஷயங்களை யெல்லாம் யோசிக்கையில் இந்திய ஜனங் களுக்கு இயந்திரசாலைகள் பொருத்தமில்லை.

வீடுகளில் தொழில் செய்தே, முற்காலத்தில் இந் தியா தன்னுடைய தொழில்களுக்காகக் கீர்த்தி அடைந்தது; இந்தியாவில் செய்யப்பட்ட பண்டங் களைப்போல் உலகில் வேறு எங்கும் செய்யப்பட வில்லை என்று அவை புகழ் பெற்றிருந்தன. அவை களைப் புனருத்தாரணம் செய்தால்தான் இந்தியாவின்

பழைய க்ஷேமம் மறுபடி உண்டாகும். கைத்தறியைத் திருத்தக் கூடுமானால் திருத்துங்கள், ராட்டினத்தைத் திருத்தக் கூடுமானால் திருத்துங்கள், பருத்தி சாகுபடியைக் கூடுமானால் திருத்துங்கள்; ஆனால் இயந்திரத்துடன் போட்டிபோட முடியாதென்று சொல்லிக்கொண்டு சும்மா உட்கார்ந்திராதீர்கள்; இயந்திரங்கள் வேலை செய்கிறபடி செய்யட்டும், நாமும் நம்முடைய வீட்டில் வேலை செய்வோம்: அதன் பலனாக நமக்கு வேண்டிய வஸ்திரங்களை நாம் சீக்கிரத்தில் நெய்துகொண்டுவிட முடியும். ஏராளமாக வீட்டிலேயே நூல் உற்பத்தி செய்யக் கருவிகளைக் கண்டுபிடிக்க சாஸ்திரக்காரர்கள் முயற்சி செய்யட்டும். கைத் தறியைக்கொண்டு வஸ்திர உற்பத்தியை அதிகமாக்க அவர்கள் வேறு தறிகளைக் கண்டுபிடிக்கட்டும்; அப்பொழுது வேறு வழியில் தொழில் செய்வோருடன் நாம் போட்டி போட அவசியமிராது. நம்முடைய தேசமானது பலவகையான சௌகரியங்களை உடையது. எவனும் சொப்பனத்தில் கூட இப்படிப்பட்ட தேசமொன்றிருக்குமென்று நினைத்திருக்கமாட்டான்; பலஜாதிகள், பலமதங்களைச்சேர்ந்த கோடிக்கணக்கான ஜனங்கள் இந்த தேசத்தில் இருக்கிறார்கள். மனிதனுடைய தேவைகளுக்கும் சௌகரியங்களுக்கும் உதவக்கூடிய பண்டங்கள் தரையிலும் கடலிலும் மலையிலும் ஏராளமாக உற்பத்தியாகின்றன. அப்படிப்பட்ட தேசத்திலுள்ள நாம் அதைரியப்பட வேண்டியதில்லை. நம்முடைய போராட்டத்தை உலகம் முழுமையும் கவனித்துக் கொண்டிருக்கிறது; நாம் தோற்றுப் போவோமாயின், ஆடுகள் என்றுதான் நம்மைச் சொல்லவேண்டியிருக்கும்.

இந்தச் சிறு நூலை நான் எழுதிக் கொண்டிருக்கையில் மிகவும் முக்கியமான தீர்மான மொன்று வங்காள சட்டசபையில் ஸ்ரீமான் தரித் பூஷண ராயினுல் கொண்டுவரப்பட்டது. அது பின்வருமாறு:—

"நூல்களையும் இதர மூலப் பொருள்களையும் வாங்கி, நெசவுக்காரர்களுக்கு அவைகளை வினியோகம் செய்வதற்காக முக்கியமான ஸ்தலங்களில் கூட்டுறவுக் கிடங்கு வைக்க உடனே ஏற்பாடு செய்யவேண்டும், அவைகளுக்கு நடுநாயகமாக கல்கத்தாவில் ஒரு மத்தியக் கிடங்கு ஏற்படவேண்டும். நெசவுக்காரர்கள் நெய்யும் வஸ்திரங்களை வாங்கி நல்ல விலைக்கு அந்தக் கிடங்குகள் விற்கவேண்டும். மூலப்பொருள்களின் உற்பத்திக்கு ஆதரவு காட்டவும் நெசவுக்காரர்கள் பெருவாரியாக ராட்டின நூலை வாங்கி உபயோகிக்கும்படி செய்யவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்."

மேற் சொன்ன தீர்மானத்தைப் பிரேரணை செய்தவர் பேசும் பொழுது, இறக்குமதி செய்யப்படும் துணிகளின்மேல் கவர்ன்மெண்டார் வரியை உயர்த்தி விட்டதால், துணிகளின் விலை உயர்ந்து விட்டதென்றும், வீட்டுத்தொழில்களைக் கைதூக்கிவிடக் காலம் வந்துவிட்டதென்றும் சொன்னுர். அதன் மேல் ராய் பகதூர் ராதா சரண பால் என்பவர் பின் வருமாறு பேசினுர்:—

"மூலப் பொருள்களை மொத்தமாக வாங்கிக் கொள்ளவும், நெய்த வஸ்திரங்களை விற்கவும் நெசவுக்காரர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவில்லை. இந்த வசதிகள் இராததால், வீட்டுத்தொழில்கள் சங்கடப்படுகின்றன. வங்காளத்தில் 14 லட்சம் நெசவுக்காரர்கள் இருக்கிருர்கள். மேற் சொன்ன வசதிகள்

அவர்களுக்கிருப்பின், ஒரு வருஷத்தில் 125-கோடி கஜம் துணிகளை அவர்கள் நெய்யக் கூடும். அவைகளின் கிரயம் 42-கோடி ரூபாயாகும்''

பிறகு ஸ்ரீமான் சுரேந்தர நாத மல்லிக் என்பவர் பேசுகையில், விஷயம் முக்கியமானதாகையால் சபை யோரில் சிலர் அபிவிருத்தி மந்திரியுடன் இவ்விஷய மாகக் கலந்து பேச வேண்டுமென்று சொன்னார்.

அபிவிருத்தி மந்திரியாகிய கனம் பொருந்திய நவாப் ஸையியது நவாப் அலி சௌதரி பின் வருமாறு பதில் சொன்னார்:---

''இந்தத் தீர்மானத்திற்கு அடிப்படையாகவுள்ள நியமம் தொழில் அபிவிருத்திக் கமிஷன் சொல்லி யிருப்பதாகவே இருக்கிறது. கைத்தறிகளைக்கொண்டு நெசவு செய்வதைப்பற்றி அவர்கள் சொல்லும் பொழுது, தேவையான மூலப்பொருள்களை ஜனங்கள் வாங்கவும் அவர்கள் நெய்யும் துணிகளை விற்கவும் அவர்களுக்கு வசதிகள் செய்யாவிடின், அவர்க ளுடைய ஸ்திதியை விருத்தி செய்ய முயல்வது வீண் வேலையாக முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். உற்பத்தி செய்யப்படும் சாமான்கள் விற்பனையாகிற தற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவேண்டு மென்று வற்புறுத்தியிருப்பது கிரமமேயாகும். இம் முயற்சி பலன் தரவேண்டுமாயின், கூட்டுறவுச் சங்கங் கள் இந்த வேலையை மேற்போட்டுக் கொள்ளவேண் டும். கைத்தறி நெசவுத் தொழிலை சரியான ஏற்பாட் டின்மேல் ஸ்தாபிக்க இதுவரையில் ஒன்றுஞ் செய் யப்படவில்லை. ஆகையால் தீர்மானத்திற்கு அடிப் படையாகவுள்ள நியமத்தை நான் ஒப்புக்கொள்ளு கிறேன். அந்த நியமத்தை நான் ஒப்புக்கொள்வ

துடன், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தி கைத்தறி நெசவுத்தொழிலை விருத்தி செய்யவேண்டியது கவர்ன்மெண்டின் கடமை என்றும் ஒப்புக் கொள்ளுகிறேன்."

இவ்விஷயங்களை யெல்லாம் நீங்கள் அறிந்து கொண்டு, நாம் மேற்போட்டுக் கொண்டிருக்கிற வேலையை விடாமற் செய்யவேண்டும். கடமையைச் செய்யாது விடுதல் குற்றம். பேசசுப்பேச இனி அவசியமில்லை. போதுமான வரையில் பேசியாகிவிட்டது. இனி காரியமே செய்யவேண்டும். இந்த சமயத்தை இழந்து விடுவோமாயின், நாம் பூர்வீகத்திலேயே நாகரிகம் வாய்ந்திருந்தவர்களின் சந்ததிகள் என்று சொல்லிக்கொள்ள நமக்கு வாயிராது.

---

## அத்தியாயம் V.

### முடிவுரை

முந்தின அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற விஷயங்களிலிருந்து, பின்வருமாறு நான் முடிவு செய்கிறேன். அம்முடிவுகளை நீங்கள் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. அவசியமான ஒரு பண்டத்திற்கு அன்னியருடைய கையை நம்பியிருப்பதால், கேடே விளையும். அவர்களுடைய இஷ்டப்படி அவர்கள் விலை சொல்லலாம், அவ்வளவு விலை கொடுக்க நமக்கு சக்தி இராது. பொருளாதாரத் துறையில் பிறருக் கடங்கியிருக்கையில், ராஜீய சுவாதீனம் அடைவது சிரமமாக இருக்கும். அவர்கள் பேராசைபிடித்து விலையை உயர்த்தாவிடினும், விலையானது உற்பத்தி செய்யும்

செலவைப் பொருத்திருக்கிறது, உற்பத்தி செய்யும் செலவானது பணத்திற்குள்ள கிராக்கி, கப்பல் சத்தம், முதலிய காரணங்களைப் பொருத்திருக்கிறது.

2. இந்தியாவில் விவசாயிகளே அதிகமாக விருக்கிறார்கள். வருஷமுழுமையும் வயல்களில் வேலை இல்லை. வயல்களில் வேலையிராத காலத்தில் வீட்டில் செய்யக் கூடிய வேலை ஒன்றிருக்க வேண்டும். இயந்திர சாலைகள் கூடாது, ஏனெனில் வயலில் வேலை செய்ய வேண்டிய காலத்தில் இயந்திரங்களை நிறுத்திவிட முடியாது. ஆகையால் கைராட்டினமும் கைத்தறியுந் தான் சரியான வழிகள்.

3. கை ராட்டினத்தில் வேலை செய்தவன் மூலமாக ஸ்திரீகளுக்குச் சுயமதிப் புண்டாகும்.

4. உற்பத்திக் கிரயம் அதிகமாகாது, ஏனெனில் பருத்தி அடுத்தாற்போல் விளைகிறது. கைராட்டினத்தில் நூற்ற நூல் அதிக நாள் உழைக்கும். ஐரோப்பாவிலிருப்பதைவிட இந்த தேசத்தில் கூலி மலிவு. கப்பல் கூலி கொடுக்கவேண்டியதில்லை. இயந்திரங்கள் தேய்ந்து போய் விடா. முதலுக்கு வட்டி செலுத்தவேண்டிய அவசியமில்லை, நிர்வாகச் செலவு அதிகமிராது.

5. இயந்திரசாலை வாழ்வு இந்தியாவுக்குப் பொருந்தினதல்ல, முக்கியமாக வங்காளத்துக்கு அது பொருந்தாது. ஏற்கெனவே வங்காளத்திலுள்ள சணல்சாலைகளில் வங்காளிகள் கூலி வேலை செய்யவில்லை; ஏனெனில் நிலமில்லாத ஏழைகள் வங்காளத்தில் அதிகமில்லை; மேலும் செய்ததையே மறுபடியுஞ் செய்கிற வேலை வங்காளிகளுக்குப் பிடித்ததல்ல. வங்காளத்

தில் இயந்திரசாலைகளை ஸ்தாபிப்பது சாத்தியமான வேலையன்று. நிலமில்லாத ஏழைகளுக்கு வேலை தேடிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் நில முடையவர்கள் ஒய்வுநேரத்தில் செய்யக்கூடிய வேலை யையே நாம் கண்டு பிடிக்க வேண்டும். அதற்குக் கை ராட்டினமும் கைத்தறியுமே வழி.

5. குடியானவர்கள் தவிர, மத்திய வகுப்பினரில் ஒரு பகுதியாருக்குச் சம்பாத்திய வழி ஒன்றைக்கண்டு பிடிக்க வேண்டும். வார சாகுபடி செய்கிறவர்கள், மக சூல் சூன்யமாகிவிடின், ஜீவனத்துக்கு வேறு வழியி ராதவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் சிலர் பட்டணங்களுக்குப்போய் விடுகிறார்கள்; அதாவது கேட்டிலிருந்து பெரிய கேட்டுக்குப் போகிறார்கள். பெரும்பாலோர் கிராமங்களிலேயே இருந்துகொண்டு துன்பப்படுகிறார்கள். அவர்கள், அவர்களுடைய குடும் பத்திலுள்ள ஸ்திரீகள் முதலியவர்களுக்குக் கைராட் டினமானது கண்டெடுத்த புதையலாகும். அதன் பலனாக, ஏழைகள் பட்டணங்களுக்குப் போய் விடு வது குறையும். பட்டணங்களில் அவர்கள் தரித்திர காலட்சேபம் செய்துகொண்டு, அக்கம் பக்கங்களி லுள்ள செல்வவான்களின் போகங்களைக்கண்டு, பண ஆசைபிடித்து நற்குணங்களை இழந்து விடுவது தடுக் கப்படும். ஏழைகள் பட்டணங்களுக்கு ஓடுவது தான், இக்காலத்தில் வங்காளத்திலுள்ள பெரியகேடு. அதைத் தடுத்தாலொழிய நமது ஜாதிக்குள்ள உயர் குணங் கள் போய்விடும். எவ்வளவு படித்தாலும், எவ்வளவு சொத்திருந்தாலும் அவை நற்குணங்களுக்குச் சமமாகி விடமாட்டா. ராஜீய வழியில் அன்னியருக்கு அடங்கி யிருப்பதாலேயே நம்முடைய ஆண்மைத்தனம் போய்

விட்டது. தரித்திரமும் அதை ஒட்டி வரும் மலேரியா ஜ்வரமும் நம்மை ஒடித்துப் போட்டு விட்டன.

வாரிச் சுருட்டி எழுந்து இந்தச் சோம்பேரி தனத்தை உதறித் தள்ளாவிடின், நம்முடைய அந்தி காலம் சமீபித்து விடும். இப்பொழுது நாம் உள்ள ஸ்திதியில் நாசமாகி விடுவோம் என்பது நிச்சயம், ஆனால் இன்றைக்கா நாளைக்கா என்பது தான் தெரிய வேண்டும்.

---

## சர்க்கா கீதை.

A

பெருமகன் காந்தி, பேரறிவாளன்
தருமநெறி நின்மின் தாய்மாரே நீர்
தருமநெறி நின்று தாய்மாரே நீர்
ராட்டினஞ் சுற்றுமின்
நாட்டினைக் காமின்.

லாகூரில் எந்தத் தெருவிலும் எந்தச் சந்திலும் இந்தப் பாட்டு காதில் விழுகிறது, எந்த வீட்டிலும் சர்க்கா சுழன்று கொண்டிருக்கிறது. கை ராட்டினத்தைக் கொண்டு இதற்கு முன்னரும் நூல் நூற்றுக் கொண்டு வந்திருக்கிற ஸ்திரீகள் இப்பொழுது முன்னிலும் அதிக ஆர்வத்துடன் அந்த வேலையைச் செய்கிறார்கள், ராட்டினத்தைத் தொடவுங் கூசிய பெண்கள் இப்பொழுது சந்தோஷத்துடன் அதை நாடுகிறார்கள்.

தலைப்பில் கண்ட பாட்டே இந்த மாறுதலுக்குக் காரணம். மகாத்மா காந்தியின் ஆர்வம் ஜனங்களுக்குள் பரவிவிட்டது. ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் அந்த ஆர்வத்தை மிகுந்த களிப்புடன் பிறருக்கும்

உண்டுபண்ணி வருகிறார்கள். ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் போகையில் அது பதின் மடங்கு அதிகரித்து விடுகிறது.

சர்க்கா என்பது ஒரு வருஷத்தில் 60-கோடி ரூபாய் தேசத்தை விட்டு வெளிப்படாமல் செய்யுமென்பது எல்லோருக்கும் தெரியும். இயந்திரசாலைகளில் வேலை செய்யும் ஸ்திரீ ஜனங்களின் மானங் கெடாமல் சர்க்கா செய்யுமென்பதும் அவர்களுக்குத் தெரியும். அன்னியதேசத் துணிகளை விற்றுப் பெரும் பொருள் சம்பாதிக்கலா மென்றுண்டாகும் பேராசைக்கு இடமிராமல் அது செய்யு மென்பதையும் ஜனங்கள் நன்கறிவார்கள். மேலும் ஏழைக் குடும்பங் களின் வரும்படியை அது சிறிது அதிகமாக்கு மென்பதையும் அவர்கள் அறிவார்கள். இவை யெல்லா மல்லாமல், சுயப் பிரயாசையாலும், சுயமதிப்பாலும், தியாகத்தினாலும் சுராஜ்யத்தை அது சம்பாதித்துக் கொடுக்குமென்பதும் அவர்களுக்குத் தெரியும்.

காலை முதல் மாலைவரையில், வீட்டிலிருக்க இஷ்டப்படாமல் இங்கு மங்கும் சுற்றித் திரிந்து கொண்டிருந்த ஸ்திரீகள் இப்பொழுது சர்க்காவை விட்டுப் போக மனமிராமல் வீட்டிலேயே இருக்கிறார்கள். சோம்பேறிகளும் பிரயாசைப்படும்படி அது செய்து விட்டது. பொறுமை இராதிருந்தவர்களுக்கு அது பொறுமையை உண்டு பண்ணி விட்டது. தனியாக விருக்கிறவர்கள் அதனிடமிருந் துண்டாகும் சங்கீதத்தைக் கேட்டு மனங்களிக்கிறார்கள். விஷய ஞான மிராதிருந்தவர்களுக்கு ராஜீயப் பிரக்ஞையை அது உண்டு பண்ணி வருகிறது. அன்னிய ராஜ்யாதிகாரமானது சர்க்கா க்ஷீணிக்கும்படி செய்தது, ஆனால் அது

மறுபடி தலையெடுத்து அன்னிய ராஜ்யாதிகாரம் க்ஷீணிக்கும்படி செய்யும். எனவே, பெண்கள் இந்தப் பாட்டைப்பாடிக் கொண்டு, ராட்டினத்தைச் சுழற்றுகிறார்கள். அவர்கள் அதைச் சுழற்றச் சுழற்ற, குயவன் கை மண் கிரியில் உருவாகிறதுபோல், தேசத்தின் பிற்கால கதி அவர்கள் சுழற்றும் ராட்டினத்தில் உருவாகி வருகிறது.

---

## குரு சிஷ்யர்கள்

ஆகஸ்டு மாதம் முதல் தேதியானது திலகருடைய புண்ய தினமாக ஜனங்களால் கொண்டாடப்படுகிறது. அன்று ஜனங்கள் அவரை வழி படுகிறார்கள்; ஹிந்துக்களுடைய வழக்கப்படி பூஜை என்பது இருவகைப் படும், ஒன்று வெளிப்படையாகச் செய்வது, மற்றது மானஸீகமாகச் செய்வது. பம்பாயிலுள்ள ஸர்தார் கிரகம் என்ற கட்டிடத்தின் சொந்தக்காரர்கள் வெளிப்படையான பூஜையைத் திலக மகாராஜுக்குச் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான ஜனங்கள் பார்த்து வணங்கும்படி சென்ற வருஷத்தில் இந்நாளில் ஸர்தார் கிருகத்தில் ஒரு ஜன்னலுக்கு எதிரில் திலகருடைய சரீரம் இருந்த விடத்தில் சலவைக்கல்லினால் அவர் போல் செய்யப்பட்ட ஒரு சிலையை ஸ்தாபிக்க அவர்கள் உத்தேசிக்கிறார்கள். அந்த சரீரம் இப்பொழுதில்லை, பம்பாய் சமுத்திரக் கரையில் அந்த சரீரமானது சாம்பராகி விட்டது. ஆகையால் அது போன்ற உருவமொன்றை இவ்வருஷத்தில் ஜனங்கள் காணும்படி வைக்கப்போகிறார்கள். இது வெளிப்படையான பூஜை.

மகாத்மா காந்தியோ மானஸீக பூஜை செய்ய

வேண்டுமென்று சொல்லுகிறார். அதனால் இருக்கிற வர்களுக்கும் முக்தி கிடைக்கும். திலகருடைய ஆத்மா அவரைப் போன்ற சிலையில் இறங்குவதுடன், தேச ஜனங்களுடைய சரீரங்களிலெல்லாம் புகுந்துகொள்ள வேண்டுமென்று மகாத்மா ஜபம் செய்யப்போகிறார். முக்தியடையப் பக்குவம் வந்துள்ளவர்கள் செய்யக் கூடிய பூஜை இதுதான். மனித சரீரத்தில் இன் னின்ன இடங்கள் ஜீவஸ்தானங்கள் என்ற அறிவானது இந்தப் பூஜைக்கு ஆதாரமாக வுள்ளது. உருவத்திற்கு உயிர் கொடுக்கிற ஸாதகர் தூக்கத்திலிருக்கும் உயிரைக் கிளப்பி விட்டு ஜீவ நிலைகளுக்கு அதைக் கொண்டு போகிறார். தேச ஜனங்கள் என்ற சரீரத்தில் இதைச் செய்யவே மகாத்மா பிரயத்தனப்படுகிறார்.

மானஸீக பூஜை செய்கிறதற்குப் பதினைந்து நைவேத்யங்கள் ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின் றன. அவைகளிலெல்லாம் உயர்ந்தது அஹிம்ஸை.

ஒரு உருவத்தினிடத்தில் மனதைச் செலுத்தா மல் தியானம் செய்யக் கூடாதவர்கள் தங்களுடைய இஷ்டதேவதையை மனதில் நினைத்துக்கொண்டு தியா னம் செய்து தங்களுடைய பக்தியைக் கொண்டும் மந் தர பலத்தைக் கொண்டும் அந்த உருவத்திற்குப் பிரா ணப் பிரதிஷ்டை செய்யும்படி ஆகமங்கள் சொல்லு கின்றன.

நாம் செய்யவேண்டிய பிராணப் பிரதிஷ்டைக்கு ஸ்வராஜ்ய மந்திரமே மந்திரமாகும். மந்திரத்திற்கு தேவதை லோகமான்ய திலகர், ஸத் குரு மகாத்மா காந்தி. இம்மாதிரிப் பிராணப் பிரதிஷ்டை செய்யப் பட்ட விக்ரகத்திலிருந்து பூஜை செய்கிறவனுடைய

சரீரத்தில் ஒரு சக்தி பாய்ந்து அவன் தன்னுடைய இஷ்டசித்தியை யடையும்படி செய்கிறது.

இந்த தேச ஜனங்கள் இஷ்டசித்தி அடைவதற்கு இடையூருக ஒரு சக்தியு முலகில் இராமற் செய்யும் படி குரு காந்தியின் ஸாதனமும் சிஷ்ய ஜனங்களின் மனோ பலமும் சேர்ந்து கொள்ளட்டும்.

---

## தோட்டக்கார மகாத்மா

சென்ற வருஷம் இந்நாளில் ஒரு பெரியவர் பர லோகப்ராப்தி அடைந்தார்; ஆனால் அவர் காலகதி யடைந்து விடவில்லை யென்று தான் அன்று பம்பா யில் எல்லோருக்கும் ஒரு உணர்ச்சி உண்டாயிற்று; எங்கும் அவர் பிரஸன்னமாக இருந்ததாகவே தோன் றிற்று. பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போன பொழுது ஒரு சக்கரவர்த்தி விஜயம் செய்வது போலி ருந்தது. பாடை தூக்கினவர்களில் ஒருவர் காந்தி. ஜனங்களுடைய இருதயமாகிய ஆஸனத்தில் திலகருக் குப் பிறகு வீற்றிருக்கும்படி இளையபட்டம் அவருக் குக் கட்டப்பட்டிருந்தது. மகாராஷ்டிரப் பிராமண ருக்குப் பிறகு குஜராத்தி பணியா அந்தப் பதவியை வகிக்க வேண்டுமென்பது தேவர்களின் திருவுளம் போலும். பிராமணர்கள் தவிர மற்றவர்கள் பாடை யைத் தூக்கும்படி விடுவார்களோ என்று மகாத்மா காந்திக்கு சந்தேக மேற்பட்டது. ஸ்ரீமான் கேல்கார் பூனாவுக்குப் போயிருந்ததால், ஸ்ரீமான் கபர்தேயிடம் இவ்விஷத்தை மகாத்மா பிரஸ்தாபித்தார். உடனே பதில் சொல்ல அவரால் கூடவில்லை. கடைசியில் ஜாதிக் கட்டுப்பாட்டை தேசிய உணர்ச்சி வென்று விடவே, மகாத்மா காந்தியே யல்லாமல் மௌலானு

ஷவ்கத் அலியும் முடியிலா மன்னனைச் சுமந்துகொண்டு சென்றார்கள்.

தேச ஜனங்களின் பிற்கால ஒற்றுமையை நிர்ணயிக்கக்கூடிய சொக்கட்டான் காயைக் குலுக்கிப் போட்டாய் விட்டது. மகாராஷ்டிரப் பிராமணர்கள் இந்தியாவிலுள்ள மற்ற ஜனங்களுடன் சம்பந்தப்படாமல் தனித்து நிற்கும் காலம்போய் விட்டது. மகாத்மாவைத் தாங்களும் பின் பற்றினவர்கள் என்று அவர்கள் உறுதி கூறுகிறார்கள். அலி சகோதரர்களுடன் கூடிப்பழகி ஹிந்துக்களும் முகம்மதியர்களும் ஒற்றுமைப்பட தங்களால் கூடியதை அவர்கள் செய்து வருகிறார்கள்.

திலக மகாராஜின் புண்ய தினத்தன்று சுவராஜ்ய விதையைத் தோட்டக்கார மகாத்மா ஜனங்களுடைய இருதயமாகிய மண்ணில் நட்டார். அவருடைய நெஞ்சழுத்தம் வியப்பை உண்டுபண்ணுவதாக இருக்கிறது. அந்த விதைக்கு அன்பெனும் நீர் பாய்ச்சி அவர் அல்லும் பகலும் அதை வளர்த்து வந்திருப்பதன் பலனாக, ஒரு வருஷத்திற்குள்ளேயே அது முளைத்துச் செடியாகிப் பல தளிர்கள் தோன்றிவிட்டன. சுவராஜ்ய மென்ற பழுத்த பழத்தை அவர் சீக்கிரத்தில் ஜனங்களுடைய கையில் கொடுப்பாரென்று நம்புகிறேன்.

---

## பக்கிரி.

நேற்று இந்த மேடையில் நின்றுகொண்டு ஒரு பக்கிரி உங்களுக்குப் பிரசங்கம் செய்தார். இந்த அலகாபாத் என்ற பட்டணத்திற்கு பக்கிரிபாத் என்று

வேறொரு பெயர் இருப்பதாக அறிந்து அவர் சந்தோஷப்பட்டார். அலகாபாத்திற்கு பக்கிரிபாத் என்ற மறு பெயர் இருப்பது மாத்திரம் போதாதென்றும், அது பக்கிரிபாத்தேயாகி விடவேண்டுமென்றும், அதிலுள்ள ஜனங்கள் பக்கிரிகளாகி விட வேண்டுமென்றும் அவர் விரும்பினார். நீங்கள் எல்லோரும் பக்கிரிகளாகி விடவேண்டுமென்று தமக்குள்ள விருப்பதை மகாத்மா வெளிப்படையாகச் சொல்லவில்லை. பண்டைக் காலத்திய மகரிஷிகள் போல் சூத்திரங்கள் மூலமாக அவர் உபதேசம் செய்து வருகிறார். அந்தச் சூத்திரங்களின் உட்கருத்து என்னவென்று சிஷ்ய ஜனங்கள் சிந்தனையினால் கண்டு கொள்ள வேண்டும்.

"எவருக்கும் அடிமைப் படாதீர்கள், மகாத்மாவினுடைய அடிமைகளாகக்கூட ஆகிவிடாதீர்கள்" என்று சிறிது நேரத்திற்கு முன் மௌலானா முகம்மதலி உங்களுக்கு உபதேசம் செய்தார். இந்தியர்கள் காந்திஜியின் அடிமைகளல்லர். ஆனால் அடிமைகள் போல் அவர்கள் ஏன் அவரைப் பின்பற்றி நடக்கிறார்கள் என்று கேட்கலாம். பண்டிதர் மதிலால் நேரு நேற்றிரவு செய்த பிரசங்கத்தில் இக்கேள்விக்கு விடையளித்திருக்கிறார். ஜனங்களுடைய மனதில் மறைந்திருக்கிற கருத்துகளை மகாத்மா வெளிப்படையாக எடுத்துச் சொல்வதே அவரிடத்தில் ஜனங்களுக்குள்ள பக்திக்குக் காரணம். "இந்தியாவின் ஆத்மாவாக மகாத்மா இருக்கிறார். நமக்கெல்லாம் உள்ள உட்கருத்தை அவர் வெளிப்படுத்துகிறார்" என்று பண்டிதர் நேற்று சொன்னார். இந்தியா முழுமையிலுமுள்ள ஜனங்கள் மகாத்மாவின் ராஜீய சிஷ்யர்களாக

இருக்கிறார்கள். அவர் சொல்லும் தத்துவங்களை நாம் ஆராய்ந்து பார்த்து, அவைகளின் கருத்தை அறிந்த பிறகே அவைகளை ஒப்புக்கொள்ளுகிறோம். அவர் குருவாக இருப்பதன் அழகு இதுதான்.

நம்மையெல்லாம் பக்கிரிகளாக்கிவிட அவர் ஏன் விரும்புகிறார் என்று கவனிப்போம். துளஸி தாஸர் ஸர்வ ஸங்கப் பரித்தியாகம் செய்துவிட்டு ஒரு ஆச்சிரமத்தில் வசித்து வந்தார் என்பது உங்களுக்குத் தெரியும், அதில் சில பாத்திரங்கள் இருந்தன. அவைகளைத் திருடிக்கொண்டு போய்விட ஒரு நாள் இரவில் சில திருடர்கள் ஆச்சிரமத்திற்குள் நுழைந்தார்கள்; ஆனால் ஒரு சிப்பாய் அங்கு பாரா கொடுத்துக்கொண்டிருந்ததைக் கண்டதும் அவர்கள் ஓடிப்போய் விட்டனர். மறுநாள் இரவும் திருடுகிறதற்காக அவர்கள் ஆச்சிரமத்திக்குச் சென்றார்கள்; அன்றும் சிப்பாய் பாரா கொடுத்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் திருடர்களுக்குப் பயமுண்டாகி அவர்கள் ஓட்டமெடுத்தனர். மறுநாட் காலையில் அவர்கள் துளஸி தாஸரிடம் போய் அவருடைய பாதத்தில் விழுந்து "தங்களுடைய பாத்திரங்களைக் காவல் புரியும் கருப்புச் சிப்பாய் யாரென்று சொல்லுங்கள்" என்று கேட்டனர். இதைக்கேட்டதும் தாஸருக்கு அழுகை வந்துவிட்டது. "ஐயோ என் செய்வேன், எனது சியாம சுந்திரனுக்கு எவ்வளவு சிரமத்தைக் கொடுத்து விட்டேன். எனது பாத்திரங்களால் அவனுக்கு எவ்வளவு சிரமமுண்டாகி விட்டது" என்று சொல்லிக்கொண்டு, அப்பாத்திரங்களை அவர் திருடர்களுக்குக் கொடுத்து விட்டார்.

துளஸி தாஸருடைய பாத்திரங்களைக் காவல்

புரிந்தது போல் நம்முடைய அற்ப ஐவேஜிகளைக் காக்கும்படி நாம் சிரமப்படுத்தும் சியாம சுந்தரன் யார்? அவன் நம்முடைய ஆத்மாவே, அதாவது நம்முடைய ஆத்ம சக்தி. அற்பமான பந்தங்களிலிருந்து அதை நாம் விடுதலை செய்வோமாயின், மகத்தான காரியங்களைச் செய்ய அது வல்லமை உடையது. ஆத்மாவின் விடுதலைக்கு இடையூறாகவுள்ள பந்தங்கள் என்ன? லஜ்ஜை, லோபம், பயம், மோகம் என்ற நான்கும் பந்தங்கள் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இந்த பந்தங்களை அறுத்துவிடின், ஆத்மா சுவராஜ்யமடைந்து விடும். பந்தம் அசுத்தம் என்ற சொற்கள் ஒரு பொருளையே குறிப்பிடுகின்றன. ஆத்மாவின் அசுத்தந்தான், அதற்கு பந்தமாக இருக்கிறது. ஆத்மாவைப் பற்றின வரையில் இது எப்படி ஸத்திய வாக்கியமோ அப்படியே ராஜீயத் துறையிலும் ஸத்திய வாக்கியமாகும். ஆகையாற்றான், ஒத்துழையாமை இயக்கமானது நம்மைச் சுத்தி செய்யும் இயல்புடையது என்று மகாத்மா சொல்லுகிறார். ராஜீய சுவராஜ்யமடையவும், நாம் லஜ்ஜை, லோபம், பயம், மோகம் என்கிற பந்தங்களை அறுத்தெறிய வேண்டும். இந்தக்களிம்புகள் ஆத்மாவிலடர்ந்திராமல் ஆத்மாவை நாம் சுத்திசெய்யவேண்டும். மோட்டாவாகவுள்ள கதர் துணியை அணிந்துகொள்ளக் கூடாமல் நம்மைத்தடுக்கும் லஜ்ஜையை நாம் ஜயிக்க வேண்டும். கவர்ன்மெண்டாரிடமிருந்து பெறக்கூடிய கௌரவங்கள் பதவிகள் முதலியவைகளுக் காசைப்படும்படி செய்யும் லோபத்தைக் கொல்ல வேண்டும். சிறைச்சாலை வாஸம் கிடைத்து விடுமோ அல்லது போலீஸாரின் கையில் காட்டி விடுமோ என்று பயந்துகொண்டு நம்

முடைய குறைகளை வெளியிட்டுச் சொல்லக்கூடாமல் தடுக்கும் பயத்தைத் துறக்கவேண்டும். இங்கிலாந்து மகா வல்லமையுள்ள தென்றும், இந்தியா ஒருசக்தியு மிராததென்றும் தோற்றுவிக்கும் மோகத்தை விட்டொழிக்கவேண்டும். இப்படி யெல்லாம் செய்தால் தான், சுவராஜ்யங்கிடைக்கும். லௌகிக டம்பங்களையும் ஐவேஜிகளையும் விட்டொழிப்பதுதான் பயமற்றும் தங்கு தடையன்றி சுயப்பிரயோஜனத்தை எதிர்பாராமலும் தேச சேவை செய்வதற்கு வழி. ஒரு தேச ஜனங்கள் அதாவது ஸ்திரீ புருஷர்களிற் பெரும்பாலோர்—தாங்களாகவே தரித்திர வாழ்வை மேற் போட்டுக் கொண்டுவிடின், அவர்கள் சுவராஜ்ய மடைவது நிச்சயம். ஆகையாற்றான் மகாத்மா வாகிய பக்கிரி தேச ஜனங்கள் எல்லோருமே பக்கிரிகளாகி விடவேண்டு மென்கிறார்.

வந்தே மாதரம்.

P. R. Rama Iyar and Co., Printers, Madras.

# தேசீய ராஜீய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| மகாத்மா காந்தி அவரது ஜீவிய சரித்திரம் … … | 1 | 8 |
| இந்தியஸ்வராஜ்யம் … … | 0 | 12 |
| இந்தியாவும் சுயஆக்ஷியும் … … | 1 | 8 |
| முகம்மதாலி ஷவுகத்அலி … … | 1 | 0 |
| பி. ஆர். தாஸ் … … | 0 | 12 |
| லாலா லஜபதிராய் … … | 0 | 8 |
| ஸ்வராஜ்யம் … … | 0 | 8 |
| ஒத்துழையாமை ஏன் ? … … | 0 | 8 |
| சிறைச்சாலை அனுபவங்கள் … … | 0 | 8 |
| ஆத்மசக்தி … … | 0 | 10 |
| சிவாஜி சரித்திரம் … … | 1 | |
| ஆரோக்கியவழி (மகாத்மா காந்தி) … | 0 | 12 |
| நீதிதர்மம் … … | 0 | 6 |

பி. டி. பாணி அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதராஸ்.